பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 27 புதன்கிழமை (12.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 236




# தாஜுடீனின் சடலம் மீட்பால் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கும்




## ஆசிய மனித உரிமை ஆணையகம் வரவேற்பு



(கொழும்பு)

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் சடலம் மீளவும் மீட்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என தெரிவித்துள்ள ஆசிய மனித உரிமை ஆணையகம் இந்த நடவடிக்கையானது குற்ற விசாரணை தொடர்பில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் முனைப்பாக அமையக் கூடுமென குறிப்பிட்டுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

நேற்று முன்தினம் (10.08.2015) இரவு பத்து மணிக்கு டான் தமிழ் தொலைக்காட்சியில் இடம்பெற்ற தேர்தல் களத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் திரு.சிறீகாந்தா கூறுகின்றார் வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனை நாங்கள் நம்பவில்லை என பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன் வைத்தார். ஆனால் தமிழ் மக்கள் அவரின் நேர்மை, நம்பிக்கை என்பவற்றைக் கொண்டு அதிகபடியான வாக்குகளினால் வெற்றி பெற வைத்து வட மாகாண முதலமைச்சர் ஆக்கினர். நான் ஓர் அமைச்சர். ஆனால் நீங்கள் விரும்பிய இதே முதலமைச்சரைக் கொண்டு தமிழ் மக்கள் விரும்பும் வட மாகாண சபைக்கேற்ற உரிமையையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொடுப்பேன். முதலமைச்சருக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கைக்கும் மக்கள் இடங்கொடுக்கவும் மாட்டார்கள்.

திரு.சிறீகாந்தா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் ஐயா (TNA) ஆனால் அவரையும் நாங்கள் நம்பவில்லையென, ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அவரையும் நம்பியே வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பி வைத்தனர். இன்று சம்பந்தன் ஐயாவோ (TNA) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கௌரவம் மிக்கவர் எனவும் உண்மை பேசுபவர் எனவும் நாட்டின் சிறந்த தலைவர் அவரே எனவும் கூறி வருவதுடனும், அது மட்டுமின்றி 2016 ஆம் ஆண்டுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரும் எனவும் கூறி வருகின்றார்.

**அதே சிறந்த தலைவர் என சம்பந்தன் ஐயா கூறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் ஆணையுடன் அவரது வெற்றிலைச் சின்னத்தில் அவரது யாழ் மாவட்ட நேரடி வேட்பாளனாக நான் களமிறக்கப்பட்டுள்ளேன்.**

மக்களே!
எங்கள் மண்ணின் மகிமையை பாதுகாக்கவும், அனைத்தையும் பெற்றுக்கொடுக்கக் கூடிய வேட்பாளருக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

இப்படிக்கு
**அங்கஜன் இராமநாதன்**
வடமாகாணசபை உறுப்பினர்.

X 1

(சி-476)

## புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

सत्यमेव जयते

## CONSULATE GENERAL OF INDIA JAFFNA

**INVITATION FOR INDEPENDENCE DAY OF INDIA**

Consulate General of India in Jaffna shall be organizing a Flag-hoisting ceremony on the occasion of 69th Independence Day of India at "India House", No.29-B, Kachcheri - Nallur Road, Jaffna at 9.00 AM on Saturday, 15th August 2015.

All Indian nationals are cordially invited to attend. you are requested to bring an ID proof.

(C-1790)

பாராளுமன்றத் தேர்தல் - 2015

### தந்தை செல்வா காட்டிய வழியில்
### உதய சூரியன் சின்னத்தில் உங்கள் வீட்டுப்பிள்ளை

- வளம் கொழிக்கும் விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தராக ...
- யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் புதல்வனாக ...
- விவசாய குடியேற்ற பிரதேச மைந்தனாக ...



X 3

விவசாயிகளின் நண்பன்
**க.ஜனார்த்தனன்**
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி, கிளிநொச்சி மாவட்டம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

(சி-483)

## யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்



### அருள் ஒளி தர்சன மாலையும் ஆடிப்பூர சிறப்புப் பூஜையும்
**இடம் : இளம் கலைஞர் மண்டபம்**
**சட்டநாதர் வீதி நல்லூர்.**
**காலம் : 16.08.2015.**
**ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி**



வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மாளாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையாரின் அருள் ஒளி தர்சன மாலையும் ஆடிப்பூர சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை [illegible]

யாழ் தொடர்புகளுக்கு : 077 9825004    ஆலய தொடர்புகளுக்கு : 0045 97180192

(1467)

மீண்டும் O/L உடன்

UK, Australia, New Zealand, Switzerland, Canada, France, Germany, Singapore, Malaysia
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய

## Business & Hotel Management

3 ஆம் அணி



யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!

SEGi University & Colleges | B.H.M.S. Business & Hotel Management School | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

அனுமதிகளுக்கு
077 3616 798
021 222 0011

கற்கைநெறி ஆரம்பம்
27-08-2015
வியாழன் 10 மணி

பிரசித்திபெற்ற சுற்றுலா மையங்களுக்கான விசேட பயணம் & யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் நேரடிப் பயிற்சி

SIKARAM Any Visa to Any Country
FREE ENGLISH COURSE

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ். கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

**Sikaram (Pvt) Ltd.**
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## அன்னபூரணி கப்பலின் மாதிரி வடிவக்காட்சி



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் செய்யப்பட்டு இலங்கையிலிருந்து 76 வருடங்கள் முன்பு அமெரிக்காவின் குளோஸ்ரார் துறைமுகத்தைச் சென்றடைந்த அன்னபூரணிக் கப்பலின் மாதிரி வடிவான கப்பலை நிரந்தரமாகக் காட்சிப்படுத்தும் வைபவம் வல்வை சன சமூக சேவா நிலையத்தின் மேல் மாடிக் கட்டடத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.


குறித்த மாதிரிக் கப்பல் மீண்டும வல்வை மேஸதிரிகளால், அன்னபூரணிக் கப்பலை ஒத்த வடிவில் சிறியளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (செ-4)

## கைதான இராணுவ அதிகாரியிடமிருந்து
# பிரகீத் கடத்தல் குறித்து
# பல முக்கிய தகவல்கள்

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இராணுவ அதிகாரி முக்கிய பல தகவல்களை வெளியிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## ரொனி பிளேயர் இலங்கை வருகை



பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கையை வந்தடைந்துள்ளார்.

அவருடன் அவரது மனைவி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் சிலரும் வருகை தந்துள்ளனர்.

எமிரேட்ஷ் விமான சேவைக்கு சொந்தமான ரி.கே 348 விமானத்தின் ஊடாக நேற்று பிற்பகல் 1.40க்கு இலங்கை வந்தடைந்த அவர், தலைமையிலான குடும்ப உறுப்பினர்கள் உள்ளக வான்வழி போக்குவரத்துக்கு பயன்படுத்தும் சிறிய ரக விமானத்தின் ஊடாக அநுராதபுரத்தை நோக்கிச் சென்றுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அழைப்பின் பேரில இலங்கைக்கு வருகை தந்துள்ள ரொனி பிளேயர், இரண்டு வார காலம் இலங்கையில் தங்கியிருப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-11)

## நாட்டை அழித்தவர்கள் மீண்டும் எதனை உயிரூட்டப் பார்க்கிறார்கள்?

### நீதியமைச்சர் விஜேதாஸ

(கொழும்பு)

இலங்கைக்கு உயிரூட்டுவோம், புதிதாக ஆரம்பிப்போம் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேரதல் விஞ்ஞாபனம் நாட்டின் மரண சான்றிதழ் என்பதை மக்கள் எக்காரணம் கொண்டும் மறந்துவிடக்கூடாது என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் நாட்டை அழித்துவிட்டு மீண்டும் இவர்கள் எதனை உயிரூட்டப்போகிறார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படமும் தற்போது உள்வாங்கப்பட்டுள்ளது. இது மிகவும் வேடிக்கையான விடயமாகும். தமது தோல்வி உறுதியானமை தெரிந்ததாலேயே மகிந்த தரப்பினர் மைத்திரியின் படத்தை தற்போது பயன்படுத்துகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## தேர்தல் வன்முறை 611 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 611 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தேர்தல் வன்முறை சம்பவங்கள தொடர்பில் தமக்கு கிடைத்த முறைபபாடுகளை அடுத்தே இவர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தலுக்கான நாட்கள் இன்னும் குறைவாகவே இருக்கும் நிலையில் இம்முறை தேர்தல் விதிமுறைச்சட்டங்களை மீறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தாஜூடீனை சித்திரவதை செய்து கொடூரமான முறையில் கொலை

### பிரதி நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரகர் விளையாட்டு வீரர் வசிம் தாஜூடீனை சித்திரவதை செய்த போது தாஜூடீன் வலியால் சத்தமிடுவதை தொலைபேசி மூலம் அவரது காதலி கேட்குமாறு செய்து, அவரை கொடூரமான முறையில் கொலை செய்துள்ளதாக பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு 7 கில்பட் டெரசில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தாஜூடீனின் கொலை பற்றி கூறும போது ராஜபக்ஷ அரசாங்கமும், அவரது கோஷ்டியினரும் பொய்களை கூறியுள்ளனர்.

இலங்கையில் எந்த வாகனமும முற்றாக எரிந்து அதில் இருந்தவர் எவரும் உயிரிழந்ததில்லை.

இது கொலை என்பதை மகிந்த ராஜபக்ஷவும் ஏற்றுக்கொண்டுள்ளார். அப்படியானால், ஏன் விசாரணைகள் எதனையும் நடத்தாது, அதனை மூடிமறைத்தனர் என்பது பிரச்சினைக்குரியது.

தேர்தலுக்குப் பின்னர், இந்த கொலை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய அனைவருக்கும் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தேர்தல் முடியும் வரை முதலமைச்சர் மௌனம்

### கருத்துக்கள் கூற மறுப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரையில் நான் மௌனமாகவே இருக்க விரும்புகின்றேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் பிறவுண் வீதியில் நேற்று காலை இடம்பெற்ற பிரம்மகுமாரிகள் அமைப்பின் மண்டபத்தை திறந்து வைத்த பின்னர் முதலமைச்சரிடம் ஊடகவியலாளர் எழுப்பிய கேளவிகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருக்கின்ற நிலையில் வடக்கு முதலமைச்சர் எந்தக் கட்சிக்கோ வேட்பாளர்களுக்கோ நேரடியாக ஆதரவு தெரிவிக்காத நிலையில் முதலமைச்சரின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

எதிர்வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதனால் இத் தேர்தல் முடியும் வரையில் நான் எதனையும் கூற மாட்டேன். தேர்தல் முடியும் வரையில் மௌனமாகவே இருக்க விரும்புகின்றேன்.

இது முடிந்த பின்னர் நான் பல்வேறு விடயங்களுக்கும் பதிலளிப்பேன் என கூறி, ஊடகவியலாளர்களின் ஏனைய கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்கு முதலமைச்சர் மறுத்துவிட்டார்.



இதே வேளை வடக்கு முதலமைச்சர் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடமாட்டேன் என முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜீ.எஸ்.பி.சலுகையை பெற்றுக்கொள்வோம்

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

ஜீ.எஸ்.பி சலுகை மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவினால் தடை செய்யப்பட்ட ஜீ.எஸ்.பி சலுகையைமீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சலுகையை பெற்றுக் கொண்டால், ஊழியர்களினால் உணரக் கூடிய சம்பள உயர்வினை நிறுவன உரிமையாளர்கள் வழங்க முடியுமா என கேள்வி எழுப்பியுள்ளார்.

சலுகைத் திட்டம் மீளவும் அமுல்படுத்தப்பட்டால் சம்பளத்தை உயர்த்த முடியும் என முதலீட்டாள ர்கள் மற்றும் நிறுவன உரிமையாளர்கள் பிரத மரிடம் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை இரத்து செய்யப்பட்டது.

மனித உரிமை காரணங்களுக்காக இவ்வாறு சலுகைத் திட்டம் இரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாஜுதீன் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் வாகனம் குறித்து

# செஞ்சிலுவைச் சங்கம் விளக்கமளித்து கடிதம்

(கொழும்பு)

**பிரபல்யமான ரகர் விளையாட்டு வீரரான வசீம் தாஜுதீன், கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு சொந்தமான வாகனம் தொடர்பில் அச்சங்கம் விளக்கமளித்து கடிதமொன்றை .அனுப்பி வைத்துள்ளது.**

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான ஆரோக்கிய பணிகளுக்கு போக்குவரத்து வசதிக்கு உதவி வழங்கும்படி கேட்டு சிரிலிய பவுண்டேசனின் செயலாளரான குமாரி திஸாநாயக்க எமது தலைவருக்கு ஓர் உத்தியோகபூர்வ வேண்டுகோளை கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி முன்வைத்திருந்தார்.

இதனை தொடர்ந்து 22 ஆம் திகதி ஜூன் மாதம் 2011 ஆம் ஆண்டு இந்த வேண்டுகோள் தொடர்பில் மேல் நடவடிக்கை பற்றி ஆலோசனை வழங்கும்படி அப்போது சமூக நலன்புரி அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுக்கு எமது தலைவர் உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை அனுப்பினார்.

27 ஆம் திகதி ஜூன் மாதம் 2011 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தனது சம்மதத்தையும், ஆதரவையும் தெரிவித்தார். மேலும் அவர், சிரிலிய சவியா பவுண்டேசனுக்கு உதவி வழங்குவது இலங்கையில் மிகவும் பாதிப்படைந்த நிலையிலுள்ள மக்களுக்கு சேவை செய்ய கிடைத்த அரும் வாய்ப்பு எனவும் கூறியிருந்தார்.

இதன்படி. WP-KA 0642 இலக்க டிபெண்டர் வாகனம், சிரியல சவியா பவுண்டேசனின் தலைவியான முதல் பெண் சிராந்தி ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

20 ஆம் திகதி ஜனவரி மாதம் 2015 ஆம் ஆண்டு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் போக்குவரத்து முகாமையாளர் இந்த வாகனத்தை சிரிலிய பவுண்டேசனிடமிருந்து மீளப்பெற்றுக் கொண்டார்.

ஓகஸ்ட் 2011 லிருந்து இந்த வாகனம் இவ்வருடம் மீளப்பெறும் வரையிலும் எவ்வாறு பராமரிக்கப்பட்டது, என்னென்ன செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டது என்பது பற்றி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறியாது என்று இத்தால் தெரிவிக்கின்றோம். .

இந்த வாகனத்தின் நிறம் மாற்றம் பற்றி தகவல் வழங்கும்படி குற்றச்செயல் விசாரணை பிரிவு எமது தலைவரிடமும் பணிப்பாளர் நாயகத்திடமும் அறிக்கைதருமாறு கேட்டதற்கு இணங்க தெரிந்த தகவல்கள் அனைத்தையும் வழங்கியது.

இந்த வாகனம் இப்போது குற்றச்செயல் விசாரணைப் பிரிவிடம் உள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இவ்விடயம் குறித்து துல்லியமான தகவல்களை தொடர்ந்து வழங்கும்.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

## கே.பியிடமிருந்த ஒரு தொகுதித்தங்கம் ஜப்பானிய வர்த்தகருக்கு விற்பனை

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொடுக்கல் -வாங்கல்களுக்கு பொறுப்பாக கடமையாற்றிய குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பியிடமிருந்த ஒரு தொகுதி தங்கம், ஜப்பானிய வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஜனநாயகக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஊவதென்ன சுமன தேரர் தெரிவித்துள்ளார்.

மாளிகாவத்தை அபயராமயவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன் வசமிருந்த தங்கத்தின் ஒரு தொகுதி ஜப்பானிய வர்த்தகருக்கு விற்பனை செய்யப்பட்டமைக்கான ஆவணங்கள் என்னிடம் உண்டு. இவை விரைவில் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மகிந்தவின் பிரதம அதிகாரி காமினி செனரத் மற்றும் முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் இந்த சட்டவிரோத தங்கக் கொடுக்கல் -வாங்கல் தொடர்பில் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

கடந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் தொடர்பிலான பல தகவல்கள் எம்மிடம் உண்டு. இரண்டு கொள்கலன் தங்கம் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் காணப்பட்டது.

இந்த தங்கத் தொகுதி, 16 தடவைகள் பகுதி பகுதியாக கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த தங்க வர்த்தகம் தொடர்பிலான சட்ட ரீதியான தன்மையை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு என ஊவதென்ன சுமன தேரர் தெரிவித்துள்ளார். (இ-7)

## அமைச்சர் ராஜிதவின் மகனுக்கு எதிரான வழக்கு நேற்று நிறைவு

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் வீட்டில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகளை மீள ஒப்படைக்கும்படி கோரி மாணவி ஒருவரின் பெற்றோரால் கொழும்பு மேல் நீதிமன்றில் தொடரப்பட்டிருந்த வழக்கு நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

குறித்த பெற்றோர் தாக்கல் செய்திருந்த மனுவை அவர்களாகவே திரும்ப பெற்று கொள்வதாக நீதிமன்றுக்கு அறிவித்ததை கருத்தில் கொண்டே இவ் வழக்கை தள்ளுபடி செய்வதாக நீதிபதி லலித் ஜெயசூரிய அறிவித்துள்ளார். அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகன் 16 வயதான பாடசாலை மாணவியை தனது வீட்டில் தடுத்து வைத்திருப்பதாக சமீபத்தில் தகவல் வெளியாகியது. குறித்த மாணவியின் பெற்றோர் இந்த விடயத்தை பகிரங்கப்படுத்தி, தமக்கு நீதி வேண்டுமென கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும் அவர்களே இவ் வழக்கை திரும்ப பெற்று கொள்வதாக நீதிமன்றில் அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)




எமது வாக்கு இலங்கைத் திருநாட்டிற்கே

எமக்கு வேண்டும்

சிங்களவர்கள் X

தமிழர்கள் X

முஸ்லிம்கள் X

இனவாதத்தை ஒடுக்க வாக்களிப்போம்

அரசியல் கட்சிகள் எதனைத்தான் கூறினாலும் நாம் பொறுப்புடனே வாக்களிப்போம் !

GOVOTE

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
The National Peace Council of Sri Lanka

(115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கம். இது உங்களுடன் ஒரு கருத்துப் பகிர்வு!

# ஏன் இப்படி அரசியல் மாறக்கூடாது!

நீங்கள் நம்பியிருந்த தலைமைக ளும், தலைவர்களும் தடம் புரண்டு விட்டதை உங்களோடு நானும் உணர்கின்றேன். வெறும் விதண்டாவாதமும், அறிக்கை அரசியலில் காலத்தையும் எம் அரசியல் சக்தியையும் விரயம் செய்யும் கூட்டணித் தலைமை ஒருபுறம். எத்தனையோ சேவை கள் மக்க்ளிற்கு ஆற்றிடக் கிடக்க, நித் தமும் பொழுதை வீணடிக்கும் தலைமை ஒன்று இங்கே! சமயங்களில் இரத்தம் சூடேறும் கடிதங்கள் பல கண்டோம். ஆலோசனை? கிண்டலுடன் கூடிய ஆலோ சனைக் கடிதங்கள் போகுமிடம் போய்ச் சேர்வதும் இல்லை, எவருக்குப் புரியும் இது.

மறுபுறம் வீட்டுக்காரர்களோ வெறும் வெற்று வீரவசனம். எதற்கெடுத்தாலும் போராட்டம் வெடிக்குமாம்! நன்று, மக்களை உசார் ஏற்றும் ஆற்றல் ஐம்பது ஆண்டுகள் மிகநன்கு வளர்ச்சி கண்டு விட்டது. போதும் இந்தப் போராட்டம் வெடிக்கும் என்ற பொய்ப் பேச்சு. தேர்தல் போனதும் அதுவும் போன கதை தான். இந்த சொகுசு வாகனப் பிரமுகர்களை வாகனத்தில் பார்ப்பதே முடியாத கதை தானே. எத்தனை காலம் இந்த வசன வித் தைகள் அரங்கேறும்? அரசிடம் வாங்கும் பணம், மக்களிடமே சொல்லாத கபடம்! மக்களை ஏமாற்றும் இவர்களா மக்கள் பிரதிநிதிகள்? அரசியல் மூலம் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் தான் இவர் களில் பலர். தமிழ் தேசிய இனத்தின் உரிமைக் குரலுக்கு இவர்கள் சரியான வர்களா?

ஏமாற்றுபவர், ஏமாறுபவர்கள் மன் னிக்க முடியாத இரு வகை. சூரியர்களது சில மேல்மட்ட தொண்டர்களின், வேட்பா ளர்களின் வீண் விரயச் செலவு ஓர் இடப்பெயர்வு முகாமை வயிராற உணவ ளிக்கப் போதும். ஆமாப் போடும் இவர்க ளும், மக்களிற்கு பணத் தொந்தரவு செய்பவர்களும் ஆலோ சகர்கள் ஸ்தானத்தில் இன்று! அதை ஏற்கட்டாம் தலைமை. ஏமாறுபவர் கள் ஏமாறலாம். ஆனால் பிறரையும் தன்னோடு சேர்த்து ஏமாறச் சொல்லும் உரிமை எவருக்கும் கிடையாது. இது விதண்டாவாதத்தின் இன் னொரு பக்கமா? விதண் டாவாதத் தலைமைகள் தடுமாறும் போது, மக்கள் சேவைக்கு அருகதை யற் றவர்கள் நுழைந்து விடு கின்றமை டிக்களுக்குத் தான் ஆபத்து. கண்ணிய மான தலைவர்கள், கன வான்கள் வந்த பாதையில் இன்று மக் களை குத்தும் முட்கள் தான் ஆலோச கர்கள் என்ற பெயரில் முடிவுகளை எடுக்கின்ற துயரம். இவற்றைக் கைகட்டி நின்று பாத்திருக்க முடியவில்லை.

**உணர்ச்சிப் பேச்சு,**
**விதண்டாவாதம்,**
**வியாபார அரசியல்வாதிகள்,**
**சுயபிரபல்யம் தேடுவோர்,**
**அரசியல் கொடைகளை படம்**
**எடுத்துப் போடும் பிரபல்ய**
**பிரியர்களை**
**நிராகரிப்பதே**
**புதிய**
**மாற்றத்திற்கான**
**முதல்படி.**

அன்பார்ந்த மக்களே! பெரும்பான்மை கட்சிகள் இங்கே எம் உரிமைக்கு துணை போகாது. தனி ஒரு கட்சியின் ஆதிக்கமும் இங்கே எமக்கு விடை அல்ல. அது அவர் தம் தவறுகளை மூடி மறைக்கத்தான் உதவும். **ஏமு நல்ல வர்களை, நேர்மையான மக்கள் சேவ கர்களைத் தெரிவு செய்ய குடும்ப மாக, நண்பர்களாக கூடிப்பேசி ஒரு கூட்டு முடிவை எடுங்கள். வாக்கு ரிமை தனிப் பட்டது ஆயினும் கூடிப் பேசி முடிவெடுப் பதில் தவறில்லை. அது சுயநல அரசியல் வாதிகளை நிராகரிப்ப தாகவே அமை யட்டும்.** உங்கள் வாக்குப் பலம் மூலம் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று நேர்மை, சேவை, அர்ப்பணிப்பின் அடிப் படையில் ஆரம்ப மாகட்டும். விட்டுக் கொடுக்கப்பட முடியாத தமிழ் தேசிய இனத்தின் சுயாட்சி, சுதந்திர உரிமைக் குரல் சரியானவர்கள் கையில் இருக் கட்டும். கூட்டமைப்பின் பின்கதவு பேரம் பேசல்காரர்கள், தொழிலதிபர் கள் தங்கள் சொந்த நலனையே அரசு டன் பேசுகிறார்கள்.

**வாரி வழங்கி வாக்களித்த முறை யும் இனி வேண்டாம். இங்கே பல திசை களில், மக்கள் .சேவையில் உண்மை .உள்ளத்தோடு சிலர் தான் வருகின்றோம் வேட்பாளர்களாக, சுயேட்சை அணியாக, கட்சிகளாக.** ஒவ்வொரு இல்லத்திலும், குறிப்பிட்ட வாக்குகளை எமக்கும் உறு திப்படுத்தி குடும்பமாக, நண்பர்களாக, அயலவர்களாக நாட்டுக்கும், மக்களுக்கு மாக நல்ல முடிவை நீங்கள் எடுக்க வேண்டும்.பெரும்பாலும் ஒவ்வொரு அணி யிலும் ஓர் இரு நல்லவர்கள் இருக்கிறார் கள் என்பது உண்மை. சேவையாளர் களையும், நேர்மையானவர்களையும் இனம் கண்டு ஒவ்வொரு அணியில் இருந் தும் ஒருவர் இருவரைத் தெரிவு செய் வதே புதிய அரசியல் மாற்றத்திற்கான ஒரே வழி. குடும்பமாகக் கூடிப்பேசி, வாக்குகளைப் பிரித்து வழங்கி எமது வெற்றியையும் உறு திப்படுத்துங்கள்.

வெள்ளை வேட்டியில் வீரவசனம் பேசி பிறரை உசார்ப்ப டுத்தும் திறமை என் னிடம் இல்லை. விதண்டாவாதம், வீண் கடி தங்கள்அடுத்தவர் நேரத்தை வீணடிக் கும் செயல்என்பேன். **உண் மைகளை உரத்துப் பேசி நீதிக்காய் குரல் கொடுப் பேன். எதிர்க்க வேண்டி யதையும், எதிர்க்க வேண்டியவர்களையும் எதிர்ப்பதில் என்றுமே தயக்கம் கிடையாது. எந்தத் தடையிலும் நிலையிலும் பொது நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே மானிட தர்மம்!** கடமைக்கு முன் உறவுகள், நட்புகள், விருப்புகள், வெறுப்புகள் முன்னிலை பெறாது. கட மைக்கு முன் எவரும் சமன் என்பதே என் சித்தாந்தம். மக்கள் சேவை என்பது ஊழலுக்கு அப்பாற் பட்டது;அர்ப்பணிப்புக் கொண்டது; வியாபார நோக்கமற்றது, மக் களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற தூய நோக்கம் கொண்டது நண்பர்களே!

எமது சமூகத்தில் ஆதரவற்ற வித


**ஒவ்வொரு அணியிலும் ஓர் இரு**
**நல்லவர்கள் இருக்கிறார்கள்**
**என்பது உண்மை.**
**சேவையாளர்களையும்,**
**நேர்மையானவர்களையும்**
**இனம்கண்டு ஒவ்வொரு அணியில்**
**இருந்தும் ஒருவர் இருவரைத்**
**தெரிவு செய்வதே புதிய அரசியல்**
**மாற்றத்திற்கான ஒரே வழி.**
**குடும்பமாகக் கூடிப்பேசி,**
**வாக்குகளைப் பிரித்து வழங்கி**
**எமது வெற்றியையும்**
**உறுதிப்படுத்துங்கள்.**



வைகள், தனியாக குடும்பப் பொறுப் பைச் சுமக்கும் பெண்கள், சிறுவர்கள், காணாமல் போனோர், இடப்பெயர்வாளர் களுடன், சமூக பிரச்சினைகளான போதை வஸ்து பாவனை பற்றி அக்கறை கொண்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனரா? தம் பதவியை விட மக்கள் பிரச்சினைகளில் அக்கறை கொண்டவர்கள் இன்று அரசி யல் கட்சிகளில் இருக்கின்றார்களா? இல்லை. முதியோர், விதவைகள், அநாதைச் சிறுவர்கள் நலன்களுடன் போதைவஸ்து ஒழிப்பு என் முதற்பணியாக இருக்கும்.

பதவியுடன் வந்த அதிகாரத்தை மக்கள் நலனுக்குப் பயன்படுத்தி விட்டு பரிவாரங்களையும், சுகபோகங்களையும் நிராகரித்தவர் பேரறிஞர் அண்ணா அவர் கள். பிரதமர் பதவியை இழந்த போது, கால்நடையாக வெளியேறி பேருந்தில் வீடு சென்றவர் முன்னாள் பிரதமர் W.தஹநாயக்கா. இவர்கள் போன்ற மக் கள் பிரதிநிதிகளை நாம் ஏன் இன்னும் உருவாக்கவில்லை? இதை உங்கள் வாக்கு பலம் ஒன்று தான் சாதிக்க முடி யும். உணர்ச்சிப் பேச்சு, விதண்டா வாதம், வியாபார அரசியல்வாதிகள், சுய பிரபல்யம் தேடுவோர், அரசியல் கொடை களை படம் எடுத்துப் போடும் பிரபல்ய பிரியர்களை நிராகரிப்பதே புதிய மாற்றத் திற்கான முதல்படி. நான் உங்களில் ஒருவனாகவே வாழ விரும்புகிறேன்.

பட்டம் சின்னத்திற்கு நேரே புள்ளடி யிட்டு எனது இலக்கமான 3 இற்கு மேலே யும் புள்ளடியிட்டு, ஒரு மாற்றத்திற்கான பயணத்திற்கு என்னை வெற்றி பெற வைக்கு மாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின் றேன். - வீ.ஆ.ஜெயசங்கரி-



(110) உங்கள் ஆதரவை நல்க. pattam3@yahoo.com / 0778393349

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 2 நூல் வெளியீட்டு விழா யாழ். திருமறைக் கலாமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாண மெற்றோ கிளையின் முகாமையாளரும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய சி.சுந்தரேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூலின் ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்தியுள்ளதுடன் நூலின் முதற்பிரதியினை திருமதி வே.இளங்கோவன் சுஜீவா மற்றும் நூலாசிரியரின் தாயார் வேதநாயகம் பரிமளாகாந்தி ஆகியோர் பெற்றனர். இந்நிகழ்வின் போது...

# யோகாசனப் படவிளக்க அட்டை வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் யோகாசனப் பயிற்சி பெற்று வெளியேறியுள்ள 4 ஆம் அணி மாணவர்களால் அளிக்கை செய்து உருவாக்கப்பட்ட யோகாசனங்கள் அடங்கிய யோகாசன படவிளக்க அட்டை வெளிவந்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி மண்டபத்தில் யோகாசன பட விளக்க அட்டை வெளியீடு செய்யப்பட்டது.

இதன் முதற்பிரதியை யோகாசன போதனாசிரியர் என்.சிவ னேஸ்வரராஜா வெளியிட்டு வைக்க சிரேஷ்ட விரிவுரையாளர் எம். கருணாநிதி பெற்றுக்கொண்டார்.

இவ்விளக்க அட்டையில் சூரிய நமஸ்காரம் மற்றும் 40 இற்கும் மேற்பட்ட ஆசனங்கள் என்பன உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சுமார் 12 வருடங்களுக்கும் மேலாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாசன வகுப்புக்களில் இதுவரை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர்.

தற்போது இவ்வருடத்தில் பயிற்சி பெற்ற 4 ஆம் அணி மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்டுள்ள மேற்படி யோகாசன விளக்க அட்டையானது யோகாசனங்களை ஆவணப்படுத்தும் முயற்சியாகவும் யோகாசனப் பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் பயனடையும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பயிற்சியை பூர்த்தி செய்த 50 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களின் சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்பட விருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 14 வர்த்தகர்களுக்கு 82000ரூபா தண்டம்

மல்லாகம் பகுதியில் உள்ள 14 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு 82 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதித்து மல்லாகம் நீதவான் நீதிமன்று நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜூலை மாதம் மல்லாகம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

அதில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமை நிர்ணய விலைக்கு மேலதிகமாக பொருட்களை விற்பனை செய்தல் நிறை குறைந்த பாண் விற்பனை செய்தல் போன்ற குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் 12 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் 2 வெதுப்பக உரிமையாளர்களுக்கும் எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் எம்மால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன்போது வர்த்தக நிலைய வெதுப்பக உரிமையாளர்கள் 14 பேருக்கும் தமது குற்றத்தினை ஒப்புக்கொண்டதற்கு அமைய மல்லாகம் நீதிமன்றால் தண்டப்பணம் அறவிட்டு தீர்ப்பளிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அருள் ஒளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் வெளியீடான ஆனிமாத இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வரலாறு இந்துக்களின் திருமணச் சடங்கின் சம்பிரதாய நடைமுறைகள், ஆடி அமாவாசை விரதத்தின் மகிமைகள் என்பன அடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நூலின் தொடக்கவுரையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழாவும் இந்து ஆராய்ச்சி மாநாடு தொடர்பாகவும் பல பதிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. (இ-5)

# மஹோற்சவம்

யாழ். கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவத் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 21ஆம் திகதி இரவு 7மணிக்கு மஞ்சத்திருவிழாவும் 25 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் இடம்பெற்று 27 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அலங்கார உற்சவமும் இடம்பெறவுள்ளது. (இ-5)

# ஆடி அமாவாசை தினத்தன்று வர்த்தக நிலையங்களை மூடுக

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட கடைகள் ஆடி அமாவாசை தினத்தில் மூடப்படவேண்டும் என நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் என். யோகேந்திரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று இந்துக்களால் உலகெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ள ஆடி அமாவாசை தினத்தை விடுமுறை தினமாக அனுஷ்டிப்பதற்கு நெல்லியடி வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய அன்றைய தினம் நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அனைத்து வர்த்தக உரிமையாளர்களும் கவனத்திற் கொள்ளவேண்டும் என நெல்லியடி வர்த்தக சங்கம் மேலும் அறிவித்துள்ளது. (இ-5-60)

# கழுத்து எலும்பு முறிந்து இளைஞன் படுகாயம்

(கரணவாய்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் கழுத்து எலும்பு முறிந்து படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கரணவாய் மூத்தநாயனார் சந்தியில் பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதில் கரவெட்டி மத்திய மத்தணி எனும் பகுதியைச் சேர்ந்த தினேஸ் (வயது 27) என்ற இளைஞனே விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்ற இரு மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் கரணவாய் சந்தியில் திருப்ப முற்பட்டவேளை பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியது.

மேற்படி விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ள இளைஞர் அரச உத்தியோகத்தர் எனவும் தெரியவந்துள்ளது. (இ-5-60)








தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலி கிளை அலுவலக திறப்பு விழா நேற்று முன்தினம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள புதிய கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் அஸ்வின் டீ சில்வா, பொதுமுகாமையாளர் எஸ்.டி.என்.பெரேரா, சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் ஜெ.கே.கமநாயக்க, பிரதிப் பொதுமுகாமையாளர் எம்.பி.ஏ.டபிள்யூ. பீரிஸ், உதவிப் பொது முகாமையாளர் இ.எம்.எம்.ஜி. ஏக்கநாயக்க, பிராந்திய முகாமையாளர் எ.எல்.எ.ஹலீம், வடபிராந்திய முகாமையாளர் வி.வி.க்ரைசன், முகாமையாளர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ. சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ஐக்கியத்தை ஏற்படுத்த ரணிலால் மட்டுமே முடியும்!

## சம்பிக்க கூறுகிறார்

**இலங்கைக்கு எதிரான சர்வதேச சவால்களுக்கு முகம் கொடுக கவும், ஒன்றிணைந்த நாட்டுக்குள் இன ஐக்கியத்தை ஏற்ப டுத்தவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே முடி யும். ஜனநாயகத்தை ஏற்படுத்தியதன் விளைவாகவே நாட் டுக்கு எதிரான சவால்களை வெற்றிகொள்ள முடிந்தது என ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளரும் அமைச்சரு மான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தவறியேனும் மகிந்த ராஜபக்ஷ வென்றி ருந்தால் நாட்டில் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கும். வடக்கில் தொடர்ந்தும் அடக்குமுறை கையாளப்பட்டிருந்தால் மற் றும் இராணுவ சப்பாத்துகளில் தமிழ் மக் களை அடக்கி வைத்திருந்தால் இன்று நாட்டில் மீண்டும் ஒரு உரிமைக்கான கலவரம் தலை தூக்கியிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நுகேகொடையில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஏற்பட்ட ஆட்சி மாற்றமானது நாட்டில் ஜனநாயகத்தையும் , மக்கள் தமது உரிமை களை வென்றெடுக்க நல்லதொரு வாய்ப்பை யும் வழங்கியது. அதேபோல் நாட்டின் தேசிய பாதுகாப்பை பலப்படுத்தவும், நாட்டுக்கு எதிராக எழுந்துள்ள சர்வதேச அழுத்தங்க ளில் இருந்து விடுபடவும் இந்த ஆட்சிமாற்றம் நல்லதொரு சந்தப்பமாக அமைந்துள்ளது.


எனினும் தவறியேனும் கடந்த ஜனாதி பதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவின் கூட்டணி வெற்றி பெற்றிருந்தால் இந்த நாடு மிகப்பெரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியமும் அமெ ரிக்காவும் எமக்கு எதிரான பலத்த நடவடி க்கைகளை முன்னெடுத்திருக்கும். எமது இராணுவ வீரர்களின் உயிர்த் தியாகத்தின் மூலம் வென்றெடுத்த இந்த நாட்டின் சமாதானத் துக்கு மிகப்பெரிய அடி விழுந்திருக்கும். எமது இராணுவத்தை சர்வதேச கூண்டில் நிறுத்தி தண்டனை வழங்கியிருப்பார்கள். அதேபோல் நாடு இரண்டாக பிரிந்து நாட்டில் மீண்டும் ஆயுத கலாசாரம் தலை தூக்கியிருக்கும்.

ஆனால் இந்த நிலைமையில் இருந்து நாட்டையும் நாட்டைக் காப்பாற்றிய இரா ணுவ வீரர்களையும் இந்த ஆட்சி மாற்றமே காப்பாற்றியது. அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சியும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் தலையீடுமே நாட்டை சரி யான பாதையில் முன்னெடுத்து செல்கின்றது.

வடக்கில் புலிகளின் ஆதிக்கம் மீண்டும் தலை தூக்கியுள்ளதாக மகிந்த பிரசாரம் செய்கின்றார். ஆனால் வடக்கில் தொடர்ந்தும் அடக்குமுறை கையாளப்பட்டிருந்தால் மற் றும் இராணுவ சப்பாத்துகளில் தமிழ் மக்களை அடக்கி வைத்திருந்தால் இன்று நாட்டில் மீண்டும் ஒரு உரிமைக்கான கலவரம் தலை தூக்கியிருக்கும். எனினும் ஆட்சி மாற்றத்துடன் வடக்கில் ஜனநாயகத் துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதன் மூல மும் நாட்டில் சகல மக்களுக்குமான உரிமை களை பலப்படுத்தியதன் மூலமுமே பயங்கர வாத அச்சுறுத்தலில் இருந்து நாடு விடுபட்டு ள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## முன்னாள் எம்.பி.சந்திரகுமாரின் இருநூல்களின் வெளியீட்டுவிழா



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந்திரகுமாரின் மக்களை நோக்கிய பாராளுமன்ற உரைகள் அடங்கிய வாழ்வை மீட்கும் குரல், வாழ்வுக்கும் விடுத லைக்கும் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இதில் 1995 தொடக்கம் 1998 வரை பாரா ளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக வாழ்வை மீட்கும் குரல் எனும் நூலும், 2012 தொடக் கம் 2015 வரையான காலப்பகுதியில் பாரா ளுமன்றில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு வாழ்வுக்கும் விடுதலைக்கும் எனும் நூலா கவும் தொகுக்கப்பட்டுள்ளது. முன்னாள் பிர தேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழக னின் தலைமையில் பச்சிலைப்பள்ளி பலநோ க்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இந்நூல் களின் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

இதில், வெளியீட்டுரையினை கவிஞரும், ஊடகவியலாளருமான சி.கருணாகரன் நிகழ்த்த வுள்ளார். சிறப்புரைகளை யாழ்.பல்க லைக்கழக ஓய்வு நிலை துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பி ள்ளை, சிகரம் கல்வி நிறுவனத் தின் பணிப்பாளர் கோ.றுஷாங்கனும், நிகழ்த்தவுள்ளனர்.

கடந்த 2010-2011 ஆகிய பாராளுமன்ற உரைகளின்தொகுப்பு "உரிமைக்கும் உயர்வு க்கும்" நூல்ஏற்கனவே வெளியிடப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக் கது. (இ-7)











## தேர்தல் கருத்துக் கணிப்பு

### மாபெரும் போட்டி

- யாழ்ப்பாணம்-கிளிநொச்சி
- வன்னி

**தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள்**

உங்கள் கருத்துக்கு பெறுமதியான பரிசில்கள்

1. பெற்றுக் கொள்ளும் ஆசன எண்ணிக்கை?
2. பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள்?

### போட்டி நிபந்தனை

- ஒருவர் ஒரு கருத்துக்கணிப்பை மட்டுமே அனுப்பி வைக்க முடியும்
- போட்டியாளர் தாம் சார்ந்த தேர்தல் மாவட்டத்தின் முடிவை மட்டும் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வலம்புரியில் வெளிவரும் விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு போட்டி முடிவுடன் இணைக்கப்பட வேண்டும்.
- முடிபுகள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தேர்தல் கருத்துக் கணிப்பு - 2015 என தவறாது குறிப்பிடவும்.
- உங்கள் கருத்துக்கணிப்பை 06.08.2015 தொடக்கம் 14.08.2015 வரை அனுப்ப முடியும் அனுப்பவேண்டிய முகவரி பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### போட்டிக்கான விண்ணப்பப்படிவம்

போட்டியாளரின் முழுப் பெயர் : ................................................

முகவரி : ................................................

................................................

தொலைபேசி இல. : ................................................

தேசிய அடையாள அ.இல. : ................................................

................................................

போட்டியாளரின் கையொப்பம்

குறிப்பு:- தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே போட்டி முடிபுகள், வெற்றியீட்டியவர்களின் விபரம் என்பன வெளிவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சுண்ணாம்பு எங்கே?



மொகலாய மன்னர் அக்பர் சக்ரவர்த்திக்கு ஓர் எண்ணம் உதித்தது.

"பூமியில் மாளிகை கட்டிக் கொண்டு வாழ்வதை விட ஆகாயத்தில் கட்டிக் கொண்டு வாழ்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று நினைத்தார். இந்த விசித்திர எண்ணம் அவர் மனத்தில் உதித்தபோது பீர்பால் அவ்விடம் வந்தார்.

பீர்பாலைக் கண்டதும் அக்பர், "பீர்பால், வான மண்டலத்தில் நமக்கொரு மாளிகை கட்ட வேணடும். அதற்கு எவ்வளவு செலவு ஆனாலும் பாதகமில்லை. உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்," என்று உத்தரவிட்டார். இதைக கேட்டதும் பீர்பால் திடுக்கிட்டார்.

"ஆகாயத்தில் மாளிகை கட்டுவதா?" என்று திகைத்தார். ஆயினும் மன்னரின் எதிரில் தம்முடைய வியப்பையும், திகைப்பையும் வெளிக்காட்டாமல், "ஆகட்டும் அரசே!" என்றார்.

அக்பர் ஏதாவது கூறிவிட்டாரானால் அதை எதிர்த்து, "இது முடியுமா?" இப்படியும் நடக்குமா?" என்றெல்லாம் முதலில் சொல்ல மாட்டார் பீர்பால. தம் செய்கையாலும், பேச்சாலும் முடிவில் அக்பர் சக்ரவர்த்தியே தாம் சொல்லியது தவறு என்று உணரும் வகையில் செய்து விடுவார்.

பீர்பால்ஆகாயமாளிகை கட்டுவதற்காகப் பொருள் பெற்றுக் கொண்டு அரசரிடம், "அரசே, ஆகாய மாளிகை கட்டுவதற்கான சிற்பிகளைத் தேடி வெளியூர் செல்கிறேன. திரும்பி வர இரண்டு மூன்று மாதங்கள் ஆகும்," என்றார்.

"ஆகட்டும். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் கவலையில்லை. என் கனவு நனவாக வேண்டும். ஆகாயத்தில் நமது மாளிகை கம்பீரமாகக் காட்சியளிக்க வேண்டும்," என்றார் அக்பர்.

அரண்மனையிலிருந்து வந்த் பீர்பால் நேரே பறவைகளை வேட்டையாடும் வேடனொருவனிடம் சென்று, "எனக்கு இன்னும் இரண்டு மூன்று தினாங்களுககுள் நிறைய கிளிகள் வேண்டும். உயிருடன் கொடுத்தால் நிறையப் பொருள் தருவேன்," என்றார்.

இரண்டு மூன்று நாட்கள் செனறவுடன், வேடனும் நூற்றுக்கணக்கான கிளிகளைப் பிடித்து வந்து பீர்பாலிடம் கொடுத்தான். பீர்பால் அவற்றில் ஐம்பது கிளிகளை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதியை பறக்க விட்டு விட்டார். வேடனுக்கு தாம் முன்னர் கூறிய படியே நிறையப் பொருள் கொடுத்து அனுப்பி வைத்தார்.

பீர்பால் ஐம்பது கிளிகள்க்கும் பேசக் கற்றுக் கொடுத்தார். ஒவ்வொரு கிளிக்கும், "சுண்ணாம்பு கொண்டு வா! மணல் கொண்டு வா! செங்கல் எங்கே? கதவை இங்கே பொருத்து!" என்று நன்றாகப் பேசும்படியாக கற்றுக் கொடுத்தார்.

கிளிகளுக்கு பேச கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது அரணமனையிலிருந்து எவர் வந்து கேட்டாலும், தாம் ஊரில் இல்லை என்று கூறுமாறு தம் மகளுக்கும் கட்டளையிட்டிருந்தார்.

இரண்டு மாதங்கள் சென்றன-

பீர்பால் தம்முடன் இல்லாத குறையை நினைத்து அக்பர் மிகவும் வருந்தினார். பீர்பாலை கூட்டி வருமாறு ஓர் ஆளை அவர் வீட்டிற்கு அனுப்பினார்.

சற்று நேரம் சென்றவுடன் அவன், "அரசே, பீர்பால் வீட்டில் இல்லை. அவர் ஆகாய மாளிகை கட்டுவதில் தேர்ச்சி பெற்ற சிற்பிகளைக் கூட்டிவருவதற்காக வெளியூர் சென்றிருக்கிறாராம். இன்னும் ஒரு மாதத்தில் வந்து விடுவாரென்று அவருடைய வீட்டில் கூறினார்கள்," என்றான்.

இந்த பதிலைக் கேட்டதும் அக்பர் முதலில் ஏமாற்றமடைந்தார். ஆயினும் தாம் கண்ட கனவு வான மண்டலத்தில் மாளிகை ஒன்று கம்பீரமாகக் கட்டப்படப் போவதை எண்ணி, எண்ணி மகிழ்ந்தார்.

மூன்று மாதங்கள் சென்றன. பீர்பால் கிளிகளுக்கு நன்றாக பேச கற்றுக் கொடுத்து விட்டார். கிளிகளும் மிகத் தெளிவாகப் பிழையின்றி அவர் சொல்லிக் கொடுத்ததை பேச கற்றுக் கொணடன. அவைகளை அரண்மனைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு வீட்டின் தனியறையில் பூட்டி வைத்து வட்டு அக்பரிடம் சென்றார் பீர்பால்.

"அரசே, ஆகாய மாளிகை கட்டுவதற்கு சிற்பிகள் வந்துள்ளனர். வேலை தொடங்கப் போகிறது. தாங்கள் வந்து பார்வையிட வேண்டும்," என்றார்.

அக்பரும் பீர்பாலுடன் சென்றார். பீர்பால் கிளிகளை அடைத்து வைத்திருந்த அறைக் கதவைத் திறந்ததும் கிளிகள், "விர்ரென்று ஆகாயத்தை நோக்கிப் பறந்து சென்றன. அவை மேலே சென்றதும், "சுண்ணாம்பு கொண்டு வா! மணல் கொண்டு வா! தண்ணீர் ஊற்று! செங்கல்லை அடுக்கு! ஜன்னலை இங்கே பொருத்து!"என்று கூவிக் கொண்டே பறந்து சென்றன.

அக்பர் சக்கரவர்த்தி ஆச்சரியத்துடன் பீர்பாலைப் பார்த்து, "இது என்ன? இந்தக் கிளிகள் இப்படிப் பேசுகின்றன!" என்றார்.

"ஆம், அரசே! அவைகளை ஆகாயத்தில் மாளிகை கட்டுகின்றன!" என்றார் பீர்பால்.

அப்போதுதான் தாம் கூறியது நிறைவேற முடியாத ஒன்று என்று உணர்ந்த அக்பர் சக்ரவர்த்தி, பீர்பாலின் அறிவுத் திறனை வியந்து பாராட்டினார்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 30 - மார்க் அந்தோனி போரில் தோல்வியடைந்ததை அடுத்து எகிப்தின் கிளியோபாத்ரா தற்கொலை செய்து கொண்டாள்.
- 1281 - மொங்கோலியப் பேரரசன் குப்ளாய் கானின் கடற்படைகள் ஜப்பானை அணுகும் போது சூறாவளியில் சிக்குண்டு இறந்தனர்.
- 1480 - ஒட்டோமான் படையினர் இஸ்லாம் மதத்திற்கு மாற ஒப்புக்கொள்ளாத 800 கிறிஸ்தவர்களை தலையை சீவிக் கொன்றனர்.
- 1499 - வெனிசியர்களுக்கும் ஒட்டோமான் துருக்கியர்களுக்கும் இடையில் முதற் போர் இடம் பெற்றது.
- 1833 - சிக்காகோ அமைக்கப்பட்டது.
- 1853 - நியூசிலாந்து சுயாட்சி பெற்றது.
- 1877 - அசாப் ஹோல் என்பவர் செவ்வாய்க் கோளின டெய்மோஸ் என்ற சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1883 - கடைசி குவாகா (வரிக்குதிரை வகை) ஆம்ஸ்டர்டாமில் இறந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பிரித்தானியா ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் போரை அறிவித்தது. பிரித்தானிய இராச்சியதின் அனைத்து குடியேற்ற நாடுகளும் இதனுள் அடங்கின.
- 1952 - மொஸ்கோவில் 13 யூத இன அறிவியலாளர்கள், கவிஞர்கள் கொல்லப்பட்டனர்.
- 1953 - சோவியத் ஒன்றியம் ஜோ 4 என்ற தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1960 - எக்கோ ஐ என்ற முதலாவது தொலைத் தொடர்பு செய்மதி ஏவப்பட்டது.
- 1964 - இனவெறிக் கொள்கை காரணமாக தென்னாபிரிக்கா ஒலிம்பிக்கில் விளையாடத் தடை செய்யப்பட்டது.
- 1978 - ஜப்பானும் மக்கள் சீனக் குடியரசும் தமக்கிடையே நட்புறவு, அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1981 - ஐபிஎம் தனி மேசைக் கணினி வெளியிடப்பட்டது.
- 1985 - ஜப்பானில் இரண்டு பயணிகள் விமானங்கள் மோதிக் கொண்டதில் 520 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் காப்பாற்றப்பட்டனர்.
- 1985 - ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2 ஆம் கட்ட திம்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
- 1990 - வீரமுனைப் படுகொலைகள், 1990: அம்பாறை, வீரமுனையில் நானூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 - அமெரிக்கா, தென் டகோட்டாவில் டிரன்னொசோரஸ் என்னும் டைனசோரின் முழுமையான எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது.
- 2000 - கே-141 கூர்ஸ்க் என்ற ரஷ்யக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சியின் போது 118 பேருடன் பாரெண்ட்ஸ் கடலில் மூழ்கியது.
- 2005 - ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் கொழும்பில் அவரது வீட்டில், நீச்சல் தடாகத்தில் நீராடும் போது சுடப்பட்டு அடுத்த நாள் இறந்தார்.
- 2005 - மாலை தீவுகளில் அரசுக்கெதிராக கிளர்ச்சி இடம்பெற்றது.
- 2005 - இலங்கையின் தமிழ் வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா கொலை செய்யப்பட்டார்.
- 2006 - இலங்கையின் புத்திஜீவிகளில் ஒருவரான கேதீஸ் லோகநாதன் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1887 - எர்வின் சுரோடிங்கர், ஆஸ்திரிய இயற்பியலாளர் (இ. 1961)
- 1912 - சோ. சிவபாதசுந்தரம், வானொலி ஒலிபரப்பாளர், பிபிசி தமிழ் ஒலிபரப்புக்கு தமிழோசை எனப் பெயரிட்டவர் (இ. 2000)
- 1924 - ஸியா உல் ஹக், பாகிஸ்தான் ஜனாதிபதி (இ.1988)
- 1971 - பீட் சாம்ப்ரஸ், அமெரிக்க டென்னிஸ் வீரர்

### இறப்புகள்

- கி.மு 30 - கிளியோபாத்ரா (பி. கிமு 69)
- 1848 - ஜோர்ஜ் ஸ்டீவன்சன், தொடருந்து கண்டு பிடித்தவர் (பி. 1781)
- 1955 - தோமஸ் மான், ஜேர்மனிய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1875)
- 1955 - ஜேம்ஸ் சம்னர், அமெரிக்க வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1964 - இயான் பிளெமிங், ஆங்கில இதழியலாளர், எழுத்தாளர் (பி. 1908)
- 1973 - வால்டர் ஹெஸ், சுவிஸ் மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1881)
- 1973 - கார்ள் சைக்ளெர், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1898)
- 1979 - ஏர்ண்ஸ்ட் போரிஸ் செயின், ஜேர்மனிய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1906)
- 1989 - வில்லியம் ஷாக்லி, அமெரிக்க இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1910)
- 2005 - ரேலங்கி செல்வராஜா, இலங்கையின் தமிழ் தொலைக்காட்சி அறிவிப்பாளர் (பி. 1960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற தேர்தல்- 2015
## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

### அகில இலங்கை தமிழர் மகாசபை







X

3 9

நயினை கலாநிதி எந்திரியர்
காசிலிங்கம் விக்னேஸ்வரன்

சிவசம்பு சதீஸ்வரராசா
(அன்றா)

(வல)


## ஞானசார தேரர் மீது சட்ட நடவடிக்கை
### பொலிஸ் பேச்சாளர்

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறை ஏற்படுத்தியமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக் கப்படவுள்ளது என பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதியன்று வெலிபன பொலிஸ் பகுதியில் பொலிஸ் அனுமதியின்றி கோயில் ஒன்றுக்குள் பிரசாரக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இது தேர்தல் சட்டத்தை மீறும்செயலாகும் என்று சுட்டிக்காட்டிய போது ஞானசார தேரர், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து மத்துகம நீதவானின் உத்தரவின் பேரில் ஞானசார தேரர் விசா ரணை செய்யப்படவுள்ளார். (இ-7)


## பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2015



(074)

துன்பம்வரும் வேளையிலே
எமக்கு தோள்தந்து எம்முடன்
எம்மில் ஒருவனாய்...

தமிழர் தாயகத்தின் மைந்தன்

**சிவஞானம் சிறீதரன்**

M.Ed,B.A,PGDE(Mt),
PGDEM,Sp.Tr(Ag)

10

இலங்கை தமிழ் அரசுக் கட்சி

| | | |
|---|---|---|
| (வீடு) | X | 10 |

தர்மபுர மக்கள் சார்பாக - ப.மங்களநாதன்



## பாராளுமன்றத் தேர்தல் 2015
### வன்னி தேர்தல் தொகுதி



ஈழமக்களின்
இயல்பான
வாழ்விற்காய்...

(சி-464)

| | | |
|---|---|---|
| (வீடு) | X | 3 |

**திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்**

தொழிலதிபர் , பிரஜைகள் குழு உபதலைவர்

**இலங்கை தமிழரசுக் கட்சி**

(தமிழ் தேசிய கூட்டமைப்பு)

வன்னி தேர்தல் தொகுதி மக்கள்



## இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2015
## குருநாகல் தேர்தல் மாவட்டம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் சுயேட் சைக்குழு- இல 14 இல் போட்டியிடும் குழுவின் கோரிக்கைகள்.

1.தமிழ் அரசு உட்பட ஐந்து அரசுகள் கொண்ட இலங்கை ஒன்றியம் (Union of Ceylon) கூட்டு இணைப்பாட்சியின் அடிப்படையிலேயே (confederation) இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணமுடியும் திருகோணமலை (தமிழ் அரசு).கண்டி (மலைநாடு). அநுராதபுரம் (ரஜரட்டை).காலி (ருகுணு) ஸ்ரீஜெயவர்தனபுர (மாயரட்ட) ஆகியவற்றை அரசுகளின் தலைநகரங்களாகத் தேர்வு செய்யமுடியும். பாதுகாப்பு. வெளிவிவகாரம் மட்டுமே மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும். மத்திய அரசு ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் கொழும்பில் இயங்கும். ஐந்து அரசுகளும் தனித்தனி பிரதமர்களின் தலைமையில் இயங்கும்.

2.கடைசிப் போரில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த சுமார் 6000 போராளிகள் உட்பட காணாமல் போன 18,000 தமிழர்களின் நிலைபற்றி இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

3.அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் (தண்டனை விதிக்கப்பட்டவர்கள் உட்பட) நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் உடனடியாக நீக்க வேண்டும்.

4.தமிழர் தாயகத்தில் அரசு உதவியுடனான சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்தி. இராணுவ ஆட்சியை மீளப்பெறு. உயர் பாதுகாப்பு வலயங்களை முற்றாகநீக்கு.

5.இலங்கை அரச படைகளினால் கொல்லப்பட்டஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்காகவும். (GENOCIDE) போர்க் குற்றங்களுக்காகவும். மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காகவும் சுதந்திர சர்வதேச நீதி விசாரணை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (INTERNTIONAL CRIMINAL COURT) அல்லது சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (INTERNATIONAL CRIMINAL TRIBUNAL) ஒன்றின் ஊடாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதிகிடைக்கவும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எதிர்காலத்தில் தமிழ்மக்களின் பாதுகாப்புக் கருதி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் நிறுத்தப்படக் கூடியவாறுஇலங்கை அரசு ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடவேண்டும்.

6.இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய நாடுகள் சபையின் தொழில் நுட்ப உதவியுடன் இந்தியா.அமெரிக்கா போன்றநாடுகள் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும்.

7.இலங்கையின் வடக்கு.கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் 70,000 ஏக்கர் காணிகள் இலங்கை அரச படைகளினால் சுவீகாரம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள சுமார் 3000 ஏக்கர் காணிகளைத் தவிர.மிகுதி நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்து மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்படவேண்டும்.

8.இலங்கையின் வடக்கு.கிழக்கு மாகாணங்களில் வாழும்தமிழ் மக்களுக்கு தனியானமொழி. கலை. கலாசாரம். தாயகம்.பொதுப் பொருளாதாரம் இருப்பதனால் அவர்கள் ஒரு தேசிய இனமாக விளங்குகின்றனர். தமிழ்த் தேசிய இனமக்களின் சுயநிர்ணய உரிமை என்பது ஐக்கியநாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட உரிமை. தமிழ் அரசு மதச்சார்பற்ற அரசாக விளங்குவதோடு தமிழர்கள். முஸ்லிம்கள்.சிங்களவர்கள் அனைவரும் சமஉரிமையுடன் வாழ வழிவகை செய்யப்படும்.

9.போரில் கொல்லப்பட்டவர்களுக்கும்.உடல் ஊனமுற்றவர்களுக்கும்.சொத்துஅழிவுகளுக்கும் போதியளவு நட்ட ஈடு வழங்கப்படுவதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்தப்படவேண்டும். போரினால் பாதிக்கப்பட்டவர்களுக் கான மறுவாழ்வுத் திட்டங்கள் ஐக்கியநாடுகள் சபையின் மேற்பார்வையில் இடம் பெறவேண்டும்.

10.தமிழ் மக்களின் ஆகக் குறைந்த கோரிக்கையான இணைப்பாட்சியை (சமஷ்டி) தீர்வாக வழங்க இலங்கை அரசு விரும்பாது விட்டால் (Unwilling) அல்லது இலங்கை அரசினால் முடியாது விட்டால் (Unable) ஐக்கிய நாடுகள் சபை இலங்கையின் வடக்கு. கிழக்கு மாகாணங்களில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை (Referendum) நடாத்தி மக்களின் தீர்ப்பை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

சுயேட்சைக் குழு-இல 14

"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழ் மக்களாக இருக்கட்டும்"





X



## பாராளுமன்றத் தேர்தல் - 2015

சுயேட்சைக்குழு இலக்கம் 2







(சி-461)

### அரசியல் களம் கண்ட ஆறுமுகம் நடேசு இராசேந்திரன்

ஆகிய என்னை கட்சியொன்றின் தற்போதைய தலைமை ஏமாற்றியதால் சுயேட்சையாக போட்டியிடுகிறேன். ஒரு புதிய மாற்றத்திற்காக மட்டுமல்ல, புதியதோர் அத்தியாயத்தின் ஆரம்பமாகவும் தேர்தலில் குதித்துள்ளேன். தமிழ் மக்கள் எல்லோரும் (அரிவாள்) சின்னத்திற்கும் எனது இலக்கம்.1 (ஒன்று) க்கும் புள்ளடியிட்டு என்னை அமோக வெற்றியடையச் செய்யுமாறு வேண்டுகிறேன்..

**ஆறுமுகம் நடேசு இராசேந்திரன்**

HNDA,APFA,AMA,FMAAT,FIPFM(UK)

| | | |
|---|---|---|
| (அரிவாள்) | X | 1 |

சுயேட்சைக் குழு-02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உறுதி செய்யப்பட்ட எமது வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது

## கணேஷ்வரன் சுட்டிக்காட்டு

தேர்தல் பரப்புரை மேடையில் இதுவரையும் நாங்கள் எந்த தமிழ் தலைமைத்துவம் தொடர்பாகவும் தாக்கிப் பேசியது இல்லை.

கட்சிகளைப் பற்றி தாக்கிப் பேசி வாக்கு வேட்டையாட வரவில்லை. ஆனால் எங்களது சுயேடசைக் குழுவை மக்கள் ஆதரித்து அணிதிரள்வதைக் கண்டு எங்களைப் பற்றிதேர்தல் பரப்புரை மேடைகளில் கடுமையான விமர்சனம் செய்கின்றார்கள். மக்கள் மனதை வென்றுள்ள எங்களுடைய சுயேட்சைக் குழுவின் உறுதி செய்யப்பட்ட வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. நாங்கள் மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை மோசமாகச் சித்திரித்து வாக்குகளை கொள்ளையடிக்கின்ற மோசமான அரசியல் செயற்பாட்டைச் செய்ய வரவில்லை. மக்களை வாழவைப்பதற்காகவே வந்துள்ளோம் என்று ஆறாம் இலக்கத்தில் சுயேடசைக் குழுவின் கேடயச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் வே.கணேஷ்வரன் தெரிவித்தாா.

ஆறாம் இலக்கத்தில் சுயேட்சைக் குழுவின் கேடயச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல்



பரப்புரைக் கூட்டம் நெல்லியடி ராஜகிராமத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் உரையாற்றிய வேட்பாளர் வே.கணேஷவரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், காலாகாலமாக பெரும்பாலான அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் பொய்யான கற்பனைகளை விதைத்து கடுமையாக விமர்சனம் செய்து மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு வாக்குகளைக் கொளளையடிக்கின்ற கைங்கரியத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். ஆனால் நாங்கள் குடாநாட்டு தமிழ் மக்கள் படும் துன்பங்களைக் காரணங்கள் காட்டியே நாங்கள் தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்து வருகின்றோம். உண்மையிலேயே நாங்கள் குடாநாட்டில் பட்டினியால் வாடும் தமிழ் மக்களின் வயிற்றுப்பசியைப் போக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்படுகின்றோம். காலாகாலமாக உணர்ச்சி வசப்படுத்தலை குறியாக வைத துக்கொண்டு அரசியல் வியாபாரம் செய்யவரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாதத்தை கருப்பொருளாகக் கொண்டு வழக்கம் போல தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்து வருகின்றார். அவர் செய்யும் மோசமான அரசியலை நாமும செய்யக்கூடாது. இந்த நிலை தொடர்ந்து முன்னெடுக்கப் படுமாயின் இந்த குடாநாட்டு தமிழ் மக்கள் மட்டுமல்ல முழு நாடே நாறிப் போகும். இந்த இனவாத தேர்தல் ஆயுதக் கலாசாரம் இல்லாதொழிக் கப்படவேண்டும். உண்மையிலேயே எமது தமிழ் மக்களுடைய வளர்ச்சிக்கு உணர்ச்சியூட்டுதல் என்ற மையப் பொருள் எங்களுடைய பிரதேசத்தினுடைய அபிவிருத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாம் பலத்தைப்பெற்றுக்கொடுக்க வேண்டும்

## சிவசங்கர் சுட்டிக்காட்டு

மக்களின் பிரச்சினைகளுக்கு மக்களே தீர்வுகளை முன்வைக்க நாம் அவர்களுக்கு பலத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என ஐக்கியதேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் வைத்தியர் இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.



வைத்தியராக இருந்து மக்களுக்காக சேவை செய்த சிவசங்கர் வைத்தியசேவையுடன் மக்களின்பொருளாதார சேவைகளையும் செய்வதற்காக தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் காணப்படும் அமைதியான சூழலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பங்கு தான் அதிகமாக காணப்படுகின்றது.

மக்களின்வைத்திய சேவைகளை மட்டும் நிறைவேற்றி வந்த எனது தேவைகள் தற்போது அரசியல் ஊடாக மக்களின் முழுத் தேவைகளையும் நிறைவேற்ற இந்நாடாளுமன்றத்தேர்தல் ஒரு ஊன்றுகோலாக அமைந்துள்ளது.

மக்களிடம் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.அதற்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க அரசியலுக்கு மட்டும் தான் செல்வாக்குண்டு.

இதற்காகவே அரசியலுக்கு இன்று வந்துள்ளேன். கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் தப்பிப்பிழைத்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த பொது மக்களின் வைத்தியசேவையில் பங்காற்றிய 120 இற்கும் மேற்பட்ட நிரந்தர வைத்தியர்களில் தமிழன் என்ற சேவை எனது சேவை மட்டுமே.

அத்துடன் வலிகாமம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் உள்ள கழிவு ஒயில் பிரச்சினைக்கு விஞ்ஞான ரீதியான தீர்வினை ஆதாரத்துடன் மக்களிடம் காட்டி வெற்றியடைந்துள்ளேன்.

இவ்வாறான சமூகம் சார்ந்த பிரசினைகளுக்கு என்னால் முடிந்த தீர்வுகளை பெற்றுக்கொடுக்க எனக்கு அரசியலில் ஒரு பங்கு வேண்டும்.

தற்போதைய அரசியலுக்கு நான் புதியவன் என்றாலும் எனது கொள்கைகள், சிந்தனைகள், எண்ணங்கள் எப்போதும் தளர்ந்து விடாது.

அப்பாவிப் பொதுமக்களை தமது தேவைகளுக்காக பயன்படுத்தும் அரசியல்வாதிகளின் தூரநோக்கற்ற பார்வைகளை அடியோடு ஒழிக்கவேண்டும்.

எனது தீர்க்கமான அரசியல் சிந்தனைகளை பலமாக ஊன்றுவதற்கு எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தல் ஒரு வரப்பிரசாதமாகவுள்ளது.

அரசியலை சுற்றியுள்ள அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளை வெளியில் உள்ள அப்பாவி பொதுமக்களுக்கு காட்ட வேண்டும்.

எனவே வாக்காளர்களாகவுள்ள பொதுமக்கள் இனியும் ஏமாற்றப்படக்கூடாது. அவர்களது ஒவ்வொரு தேவையும் அரசியலில் கால்பதித்துள்ள எம்மால் நிறைவேற்றப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ

# தேர்தல் வியூகம்

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சூரல்கிழங்கு / பிரப்பங்கிழங்கு

Botanical Name: calamus rotang
Family: Palmae
Engl: Basket cane
Sinh: Wewel



மிக நீளமான முட்கொடி. கொடி முழுவதும் முட்கள் உள்ளன. இவை ஸ்பைன்ஸ் (Spins) எனப்படும். பூக்கும் ஒரு வித்திலைத் தாவரமாகும். இறகன்ன பிளவுபட்டது. இலைக்காம்பு நுனியில் சாட்டையைப் போன்ற நீண்டு வளர்ந்த முள்ளுடைய ''சிர்ரஸ்'' காணப்படும். இலைக்காம்பெல்லாம் முட்கள் நிறைந்திருக்கும். இலைக்காம்பின் அடிப்பாகம் தண்டுடன் தழுவி நீண்டிருக்கும். இலைக்காம்பு மிகவும் நீண்டது. பல சிற்றிலைகள் காணப்படும். நீண்ட குத்துவான் போன்ற வடிவானவை. இலையின் இருபுறத்தும் முட்கள் இருக்கும். இக்கொடியில் உள்ள மஞ்சரியை பாளை என அழைக்கப்படும். பாளை குழல் வடிவாகி மேலே பிளந்து இருக்கும். இப்பிளவுகள் இலைச் செதில்களாக விரியும். ஆண்பூக்களும் பெண் பூக்களும் தனித்தனியாக காணப்படும்.

இது பிரம்பு மரத்தின் வேர்கிழங்கே ஆகும். இதில் 2 சிற் இனங்கள் உண்டு.ஒன்று மெல்லிய மிக நீண்ட தண்டுடையது. இதுவன்றி மிகவும் தடித்த புதராகவும் நீண்டு கொடி போன்றும் வளரக்கூடியதாகும். இது மலைகளில் வளரக்கூடியது. முதற் கூறிய இனத்திற்கே மருத்துவப் பண்புகள் அதிகமாகும்.

சித்தமருத்துவத்தில் இதன் வேர் கிழங்கானது வாதநோய்களில் சேரும் மருந்துகளில் முக்கிய மூலிகையாகும். இது திருக் கோடிக்கா எனும் திருக்கோயிலின் தல மரமாகும். இதன் வேர்க்கிழங்கு மருத்துவ பயனுடையது வாதம் போக்குதல், சளியகற்றல் ஆகிய மருத்துவக் குணங்களைக் கொண்டது.

1.பிரப்பங்கிழ ங்கை உலர்த்தி பொடித்து அரித்து 2 கிராம் அளவு காலை, மாலை தேனில் கொடுத் [illegible] ஆகியவை தீரும்.

2.பிரப்பங்குளம், சுக்கு, மிளகு வாய் விளங்கும் இலைகளை ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து ஒன்றிரண்டாக இடித்து 1 லீற்றர் நீரிலிட்டு 200மில்லி ஆகக்காய்ச்சி வடிகட்டி 3 பங்காக்கி காலை, மதியம், மாலையாகக் குடி த்துவரக் காய்ச்சல், குளிர், கைகால் பிடிப்பு, உடற் குத்தல் ஆகியவை தீரும்.

3. பிரப்பங்கிழங்கு -30 கிராம்
கீழா நெல்லிச்செடி-30 கிராம்
இஞ்சி தோல் நீக்கியது-10கிராம்
ஏலரிசி-5கிராம்
வெண்மிளகு-5 கிராம்
சீரகம்-5கிராம்

இவற்றை ஒன்றிரண்டாக இடித்து ஓர் இரும்புச்சட்டியில் 1லீற்றர் நீருடன் கலந்து 200 மில்லி ஆகுமாறு காய்ச்சி வடிகட்டி மூன்று பங்காக்கி காலை, மதியம், மாலை 10 நாட்கள் எடுக்க தினமும் புதிது புதிதாக காய்ச்ச வேண்டும். கல்லீரல், மண்ணீரல் சம்பந்தமான நோய்கள் தீருவதுடன் இரத்தக்குறைபாடும் நீங்கும்.

பிரப்பங்கிழங்கு, 25 கிராம் அளவு 2 கைப்பிடியளவு நொச்சியிலை, தாழை இலை 2 கைப்பிடியளவு எடுத்து ஒரு பானையில் போட்டு தேவையானளவு தண்ணீர்விட்டு நன்றாக கொதிக்க வைத்து தேவையானளவு சூட்டுடன் குளித்து வந்தால் கை,கால் குடைச்சல் முற்றாக குணமாகும்.

முழங்கால்களில் வீக்கத்துடன் வலி காணப்படும்போது நொச்சியிலைகளை சேகரித்து அதிலுள்ள நரம்புகளை நீக்கிவிட்டு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து 1தேக்கரண்டி அளவு வேப்பெண்ணெயை விட்டு சூடேற்றிக் காய்ந்தவுடன் தேவையானளவு நொச்சியிலை போட்டு நன்றாக வதக்கி வீக்கத்தின் மேல் கட்டிக்கொண்டு உள்ளுக்கு பிரப்பங்கிழங்கு, மிளகு, வெள்ளறுகு ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காகக் குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி, காலை, மாலை அருந்தியும் வர முழங்கால் வாதம் நன்றாக குணமாகும்.

பிரப்பங்கிழங்கு, அமுக்கிரா, சுக்கு, ஏலக்காய் ஒவ்வொன்றும் ஒரேயளவாக எடுத்து உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் 2 கிராம் காலை, மாலை வெந்நீரில் அருந்த வாத நோய்கள், மூட்டு வலி, இடுப்பு வலி குணமாகும். பிரப்பங்கிழங்கை சிறு சிறு துண்டுகளாக்கி பசும்பாலில் அவித்து கழுவி உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் காலை, மாலை 1-2 கிராம் அளவு சாப்பிட்டு வர வாதநோய்கள் படிப்படியாக குணமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சம்பிக்க ஐ.தே.கவில் இணைந்தமை மிகப்பெரிய நகைச்சுவையாகும்

தர்ம இராச்சியமொன்றை அமைக்க வந்த சம்பிக்க ரணவக்க, அத்துரலிய ரத்ன தேரர் போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமையே மிகப் பெரிய நகைச்சுவையாகும் என தென் மாகாணசபை உறுப்பினர் பெத்தேகம சமித தேரர் தெரிவித்துள்ளார். அதிகார மோகம் காரணமாக ரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கைப்பொம்மையாக மாற்றமடைந்துள்ளனர்.

யானையின் மீது ஏறி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றார். இந்த முயற்சிகளை புள்ளடியின் பலத்தினால் மக்கள் முறியடிக்க வேண்டும். பௌத்த சாசனத்தையும், பௌத்த அடை யாளங்களையும் அடகு வைத்து விற்று தர்ம இராச்சியமொன்றை அமைக்க ரத்ன தேரர் சம்பிக்க போன்றவர்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டமை இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய நகைச்சுவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




## மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா பதவியிலிருந்து தூக்கப்பட்டார்!

கொழும்பின் புறநகர் மீரிஹானயில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளை வான் தொடர்பில் சந்தேகிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தின் கொமாண்டர் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா, இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

இதனையடுத்து அவரின் இடத்துக்கு பிரிகேடியர் ரால்ப் நுகேரா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் எதிர்வரும் 19 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரவுள்ளது.

கடந்த ஜூலை 22ஆம் திகதி சாதாரண உடையில் இருந்து இரண்டு இராணுவ வீரர்கள் போலியான இலக்கத்தகட்டுடன் கூடிய வெள்ளை வான் ஒன்றில் துப்பாக்கியுடன் பயணித்த போது கைதுசெய்யப்பட்டனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது அவர்கள் வைத்திருந்த துப்பாக்கி பிரசன்ன சில்வாவின் உடையது என்றும், வாகனம் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டது என்றும் தெரியவந்தது. இதேவேளை பிரசன்ன சிலவா, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நெருங்கிய அதிகாரி என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 350 சிறுவர்களைப் பயன்படுத்தி ஆபாச படம் எடுத்த கும்பல் கைது

## பாகிஸ்தானில் பெற்றோர் ஆர்ப்பாட்டம்




(இஸ்லாமாபாத்)

**350 குழந்தைகள் சீரழிக்கப்பட்டதை கண்டித்து பாகிஸ்தானின் பல இடங்களில் பெற்றோர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.? பாகிஸ்தான் குழந்தைகளுக்கு நீதி வேண்டி இஸ்லாமாபாதில் நடைபெற்ற பேரணியில் பெருந்தொகையானோர் பங்கேற்றுள்ளனர்.**

பாகிஸ்தானில் சுமார் 350 குழந்தைகளைப் பயன்படுத்தி ஆபாச படம் எடுத்த 7 பேர் அடங்கிய கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் எடுத்த ஏராளமான ஆபாச பட சி.டி.க்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் கசூர் பகுதியில் பல ஆண்டுகளாக இந்த ஆபாச படம் எடுக்கும் கும்பல் செயற்பட்டு வந்துள்ளது. பெரும்பாலும் 14 வயதுக்குட்பட்ட சிறுமிகள், சிறுவர்களை வைத்து இவர்கள் படம் எடுத்துள்ளனர்.


சர்வதேச அளவில் பாகிஸ்தானில் இருந்துதான் அதிக அளவில் குழந்தைகளை வைத்து எடுக்கப்படும் ஆபாச படங்கள் வெளியாகின்றன. முக்கியமாக பாகிஸ்தானின் சிறு நகரங்கள், கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகள்தான் இந்த கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர்.

முதலில் சிறார்களுடன் நல்ல முறையில் பழகும் இந்த கும்பலை சேர்ந்தவர்கள், அவர்களுக்கு சொகலேட், ஐஸ்கிரீம் உள்ளிட்டவற்றை வாங்கிக் கொடுத்து அவர்களை தங்கள் விருப்பப்படி வீடியோ எடுத்துள்ளனர். பின்னர் அவர்களை மிரட்டியும் பயன்படுத்தியுள்ளனர்.

சில இடங்களில் ஆபாச வீடியோ எடுக்கப்பட்ட சிறுமிகளின் பெற்றோரை மிரட்டியும் இந்த கும்பல் பணம் பறித்து வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பல தகவல்கள் கிடைத்துள்ளன். இவர்கள் இந்த வீடியோக்களை மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பி பெருமளவில் பணம் சம்பாதித்துள்ளனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இதன் பின்னணியில் உள்ள மேலும் பலர் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (3-7)

# சைக்கிளில் உலகை சுற்றிய 19 வயதான இளைஞன்



(லண்டன்)

இங்கிலாந்தைச் சேர்ந்தவர் டாம் டேவிஸ் (19). இவர் உலகம் முழுவதும் சைக்கிளில் பயணம் செய்ய முடிபு செய்தார். அதன்படி கடந்த 6 மாதங்களுக்கு முன்பு தனது பயணத்தை தொடங்கினார்.

அதை தொடர்ந்து இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் சைக்கிளில் பயணம் செய்தார். மொத்தம் 30 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இங்கிலாந்தின் டோர்செட் நகருக்கு திரும்பிய அவர் தனது பயணத்தை முடித்துக் கொண்டார்.

இதன்மூலம்சைக்கிளில்உலகை சுற்றிய முதல் இளைஞர் என்ற சாதனை படைத்துள்ளார். வெற்றிகரமாக பயணத்தை முடித்து திரும்பிய அவரை குடும்பத்தினரும், நண்பர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இது குறித்து டேவிஸ் கூறும்போது, "எனது உலகை சுற்றும் சைக்கிள் பயணம் சிறந்த அனுபவமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. பல வலி, வேதனைகள் மற்றும் கஷ்டங்களை அனுபவித்தாலும், நான் நல்லபடியாக பயணத்தை முடித்தது எனக்கே வியப்பளிக்கிறது" என்றார். 6 மாத சைக்கிள் பயணத்துக்கு இவர் ரூ. 60 லட்சம் வரை செலவு செய்துள்ளார். (3-7)

# வட இந்தியாவில் நிலநடுக்கம்

(புதுடில்லி)

ஆப்கானிஸ்தானை மையமாக கொண்டு நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் டில்லி, காஷ்மீர் உள்ளிட்ட வடமாநிலங்களில் உணரப்பட்டுள்ளது. வீடுகள், கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் பீதியடை ந்து வெளியே ஓடினர்.

ஆப்கான் - இந்துகுஷ் மலைப் பகுதியை மையமாக கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தின் அதிர்வு வட இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பல நகரங்களில் உணரப்பட்டது. இந்தியாவில் டில்லி, சண்டிகர், பஞ்சாப், காஷ்மீர், இமாச்சல் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் டில்லியில் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் அலறி அடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். காஷ்மீரிலும் இதே நிலை காணப்பட்டது.

பாகிஸ்தானில் இஸ்லாமாபாத், பெஷாவர், முசாப்பராபாத் உள்ளிட்ட நகரங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (3-7)

# அப்துல் கலாமின் சிலை ஐதராபாத்தில் திறப்பு

(ஐதராபாத்)



மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் சிலை, ஐதரா பாத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும்மேம்பாட்டுஅமைப்பின் அங்கமான இமராத் ஆராய்ச்சி மையத்தின்குடியிருப்பு வளாகத்தில் அப்துல் கலாமின் வெண்கல சிலை நிறுவப்பட்டுள்ளது. அதை பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோச கர் ஜி.சதீஷ் ரெட்டி திறந்துவைத்தார்.

'நிதி ஆயோக்' உறுப்பினர் வி.கே.சரஸ்வத், டி.ஆர்.டி.ஓ. இயக்குனர் சதீஷ் குமார் மற்றும் விஞ்ஞானிகள், அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

இமராத் ஆராய்ச்சி மையம், அப்துல் கலாமால் தோற்றுவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு அவர் தங்கியிருந்த ஆசிரியர்கள் குடியிருப்புக்கு அருகிலேயே அவரது சிலை திறக்கப்பட்டுள்ளது. (3-7)

# தலிபான்கள் வன்முறையை கைவிட அமெரிக்கா அரசு வேண்டுகோள்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகரான காபூலில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த வன்செயல்களில் 51 பேர் பலியாகி யும் 400 பேர் படுகாயம் அடைந்துள்ள நிலையில், தலிபான்கள் வன்முறையை கைவிட வேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கூறுகையில், "ஆப்கானிஸ்தானில் வன்முறையை கைவிடுங்கள் என்று தலிபான்கள், பிற தீவிரவாத இயக்கங்கள், அவர்களுக்கு ஆதரவு அளித்து வருகிறவர்கள் என அனைவரையும் நாங்கள் மீண்டும் கேட்டுக் கொள்கறோம். ஆப்கானிஸ்தான் மக்களுடன அமெரிக்கா துணை நிற்கிறது.

அங்கு ஒரு ஸ்திரமான, பாதுகாப்பான, வளமான எதிர்காலம் அமைய வேண்டும் என்பதில் அங்குள்ள அரசுக்கு ஒத்துழைப்பதில், உதவுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என கூறினார். (3-7)

# அப்துல்கலாம் நினைவிடத்தில் தினமும் 10 ஆயிரம் பேர் அஞ்சலி



இராமேஸ்வரத்தில் மக்கள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் சமாதிக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 10 ஆயிரம் பேர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

அப்துல்கலாமின் உடல் அவரது பிறந்த ஊரான இராமேஸ்வரத்தில் தேசிய சாலை அருகே உள்ள பேக்கரும்பு என்ற இடத்தில் ஜூலை 30 ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்டது.

தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் லட்சக் கணக்கான மக்கள் கலாமின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஒரு நாளைக்கு சராசரியாக 10 ஆயிரம் பேர் வீதம் இதுவரை 2 லட்சம் பேர் அஞ்சலி செலுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இராமேஸ்வரம் கோயிலுக்கு வரும் பக்தர்களில் பெரும்பாலானோர் தவறாமல் கலாம் நினைவிடத்திற்கு வந்து அஞ்சலி செலுத்தி விட்டுச் செல்கின்றனர். (3-7)

# எகிப்தில் அனல் காற்று 21 பேர் உயிரிழப்பு!

(கெய்ரோ)

எகிப்தில் தற்போது கடும் வெயில் கொளுத்துகிறது. சமீப காலமாக சராசரியாக 116.6 டிகிரி வெப்பம் பதிவாகிறது. இதனால் அங்கு அனல் காற்று வீசுகிறது.

தலைநகர் கெய்ரோ மற்றும் நாட்டின் பல பகுதிகளில் வெப்பத்துடன் கூடிய புழுதி காற்று வீசுகிறது. இதனால் முதியவர்கள், இதய நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் மற்றும் குழந்தைகள் கடும் பாதிப்புக்குளாகியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை மொத்தம் 21 பேர் அனல் காற்றுக்கு பலியாகியுள்ளனர். 66 பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடுமையாக வீசும் அனல் காற்றிலிருந்து தப்பிக்க பொது மக்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். வெளியே வர அச்சப படுகின்றனர்.

தற்போது வீசும் அனல் காற்று இம்மாதம் இறுதிவரை வீசும் என எகிப்து வானிலை மைய செய்தி தொடர்பாளர் வாகித் சவுதி தெரிவித்துள்ளார். இந்தியா தட்ப வெப்ப நிலையில் எழுந்துள்ள காற்றழுத்த தாழ்வு நிலையே அனல் காற்று வீச காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க.கொள்ளையர் கூடாரமாகியுள்ளது

## சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**அமரர் பண்டாரநாயக்கவின் கொள்கைகளை குழிதோண்டிப் புதைத்து சுதந்திரக் கட்சியை கொள ளையரின் கூடாரமாக மாற்றிய மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வெட்கமின்றி அதிகாரத்துக்கு வர முயற் சிப்பதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாட்டையும், கட்சியையும் மீட்பதற்காகவே ரணிலுடன் கைகோர்த் ததாகத் தெரிவித்துள்ளார்.**

தனது தந்தையால் உருவாக் கப்பட்ட சுதந்திரக் கட்சியிலிருந்து உயிருள்ள வரை பிரியப்போவ தில்லை எனவும் கட்சியை மீட்டுக் கொடுப்பதற்காகவே மீண்டும் அர சியல் பிரவேசம் செய்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தனகல தொகுதி நிட்டம்புவ நகரில் இடம்பெற்ற சிவில் அமைப்பு களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாதுளு வாவே சோபித தேரர் உட்பட பல்க லைக்கழக விரிவுரையாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வருடம் ஜனவரி 8 ஆம் திகதி நாம் நாட்டு மக்களுடன் இணைந்து மௌனப் புரட்சி ஒன் றின் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்திக்கொண்டோம். மகிந்த ராஜ பக்ஷ தலைமையிலான மோசடிக் கும்பலிடமிருந்து நாட்டை மீட்டெ டுத்து நல்லாட்சியை பிரகடனப்படுத் திக்கொண்டோம். இந்த மௌனப் புரட்சியில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி யினரும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் ஒன்றிணைந் தன.மக்களால் தூக்கி வீசப்பட்ட மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றார். அந்த மோசடி க்காரர்களை இன்னொரு தடவை பாராளுமன்றம் வர இடமளிக்க மாட்டோம். இவர்களின் ஊழல், மோசடிகளை அடையாளம் கண்டுள் ளோம். அவர்கள் மீது உரிய நேர த்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும். அதனையும் சட்ட ரீதியாகவே செய்வோம். பயங்கரவாதத்திலிரு ந்து நாட்டை உண்மையாக மீட்ட வர், இராணுவத்தளபதி சரத் பொன் சேகாவாகும்.

அதனை தனது சாதனையாகக் காட்டி மாலை சூடிக்கொண்ட மகிந்த, நாட்டை மீட்ட அந்தத் தளபதியை எவ் வாறு நடத்தினார் என்பதை நாடே அறியும். அவ்வாறான மிலேச்சத்தன மாக நாம் நடந்து கொள்ள மாடடோம்.

தேர்தல் முடிந்த பின்னர் சட்டம், ஒழுங்கைப் பேணி சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கத் தவறமாட் டோம் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# மீண்டும் சந்தர்ப்பம் கேட்டு மண்டியிடுகிறார் மகிந்த

முஸ்லிம்கள் என்னை தோற் கடித்து விட்டார்கள். இம்முறை எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ ஒவ்வொரு விகாரை யாகச் சென்று அங்கு வரும் பொது மக்களிடம் கூறி வருகின்றார் என முன்னாள் பாராளுமன்ற உறுப் பினரும், மு.கா. வேட்பாளருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ் லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களையும் ஆத ரித்து அக்கரைப்பற்றில் இடம்பெற்ற மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முன்னாள் அமைச்சர் அதாவு ல்லா இன்று மகிந்தவை பிரதமரா க்கத் துடிக்கின்றார். அவர் எவ்வளவு தான் துடித்தாலும் மகிந்தவை பிரதமராக்க முடியாது. அது சுலப மான விடயமும் அல்ல என்பதை அவர் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

எமது சமூகத்தையும், முஸ்லிம் காங்கிரசான இந்த மாபெரும் இயக்கத்தையும் வெறுத்து வாழ்ப வர்கள் நிச்சயமாக தோல்வியடை வார்கள். அதற்கு சான்றாக முஸ் லிம் காங்கிரஸ் செய்து காட்டிய வரலாறும், எமது தலைமை வகு த்த சாணக்கிய அரசியல் வியூக ங்களை நாம் அறிவோம்.

உதாரணமாக கடந்த ஜனாதி பதித் தேர்தலை நாம் உற்று நோக்கு வோமாயின் மகிந்தவின் ஆட்சிக் காலம் இரண்டு வருடங்கள் இருந் தும் அவரின் ஆட்சிக்காலத்தை செய்ய முடியாதளவு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வகுத்த சாணக்கியமிக்க அரசியல் வியூகத்தினால் அவரை வீட்டுக்கு அனுப்பிவைத்ததை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

இன்று அதாவுல்லா சொல்வதைப போல் மகிந்த ராஜபக்ஷவினால் எதுவும் செய்யமுடியாது. எது செய் வதாக இருந்தாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மட்டும்தான் முடியும்.

ஒரு அமைச்சரை நியமிப்பதாக இரு ந்தால்கூட அதற்கு சக்திமிக்க ஒருவ ராக ஜனாதிபதி இருக்கின்றார். அவரை எதிர்த்து இந்த அதாவுல்லா வால் ஒன்றுமே செய்யமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலந்துரையாடல்

ஐக்கிய அமெரிக்க நிதி உதவித்திட்டத்தினூடாக (USAID) 2015/2016 இல் செயற்படுத்தப்படவுள்ள VEGA/BIZ+ திட்ட முன்மொழிவு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மு.ப.10மணிக்கு இல.124 இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்தில் நடைபெற வுள்ளது.

எனவே இத்திட்டத்தில் ஈடுபட ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சம்பிக்கவின் புத்தகத்தை கிழித்து தீயிட்டு கொளுத்திய அஸ்வர்

அமைச்சர் சம்பிக்க ரணவக்க இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அடிப்படைவாதிகளாகச் சித்திரித்து எழுதிய அல்-ஜிஹாத் அல்-கொய்தா எனும் புத்தகத்தை கிழித்து தீயிட்டு கொளுத்திய முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் அப்புத்தகத்தை ஜனாதிபதி தடை செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை பம்பலப் பிட்டியிலுள்ள பர்ல் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அஸ்வர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க எழுதியுள்ள அல்-ஜிஹாத், அல்-கொய்தா என்ற புத்தகத்தில் இலங்கையில் குர்ஆன் மதரசாக்களும் அரபு கல்லூரிகளும் அஹதிய்யா பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களின் இஸ்லாமிய பீடங்களும் இஸ்லாமிய தீவிரவாதத்தை போதிப்பதாகவும் இவ் விடயங்களிலிருந்து தான் முஸ்லிம் அடிப்படைவாதம் பரப்பப்படுவதாகவும் கூறியுள்ளார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, தௌஹீத் ஜமாஅத் போன்ற இஸ்லாமிய நிறுவனங்கள் அடிப படை வாதத்திற்கு துணைபோவதாகவும் கூறியுள்ளார்.

இவ்வியக்கங்கள் சமாதானத்தையும், நல்லொழுக்கத்தையுமே போதிக்கின்றன என்பதை சம்பிக்க அறியாதிருப்பது கவலைக்குரியது.

குர்ஆன் பாடசாலைகள் உருவாகுவதற்கு காரணமாக இருந்தவர் இன்றைய அமைச்சர் கபீர் ஹாஷிமின் அப்பா இப்ராஹிம் என்பவராவார்.

குர்ஆன் மதரஸாக்களைப் பற்றிய தவறான கருத்துக்களை தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க, இப்போது ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

இந்நிலையில் இது பற்றி அமைச்சர் கபீர் ஹாஷிம் என்ன சொல்கிறார் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இந்நிலையில் தற்போது அமைச்சர் சம்பிக்கவிடம் கூட்டு சேர்ந்துள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதற்கு என்ன சொல்கிறார். பல்கலைக்கழக இஸ்லாமிய பீடங்களில் தீவிரவாதம் போதிக்கப்படுகிறதா? சம்பிக்கவின் கூற்றை அவர் ஏற்றுக் கொளகிறாரா என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டவர்கள் கூட்டுச் சேர்ந்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முஸ்லிம்கள் எவ்வாறு வாக்களிக்க முடியும்? எனவும் தெரிவித்தார். (இ-7)


"றோயல் சுத்தமான தேங்காய் எண்ணெய்"

சுப்பு:- என்ன மணியண்ணே, கடைக்கு வந்து எல்லாத்தேங்காயெண்ணைப் போத்தலையும் முறைச்சுப் பார்க்கிறியள்?

மணி:- இதில உள்ள எல்லாத்தையும் வாங்கி சமைச்சுப் பாத்திட்டன் ஒண்டிலையும் வாசனையோ சுவையோ இல்லை. எல்லாம் கலப்படம்.

சுப்பு:- இதுக்கு ஏன் குழப்பம். நேரடியா சிவா நறுமணப் பூங்கா கடைக்கு போங்கோ. அங்க **"றோயல் தேங்காய் எண்ணையிண்ட"** சாம்பிளை வாங்கி கையில் பூசி மணந்து பாருங்கோ. பிறகு நீங்க அந்தத் தேங்காயெண்ணையை மட்டும் தான் வாங்குவியள். தரமான சுவையான, வாசனையான சாப்பாட்டிற்கு **"றோயல் சுத்தமான தேங்காயெண்ணையை"** அடிக்க எதுவும் இல்லையண்ணே. இப 200ml, 500ml அளவில கிடைக்குது. சாப்பாட்டிற்கு மட்டுமல்லாம தலைக்கும் வைக்கலாம்.

மணி:- அப்ப ஒரு கல்லில இரண்டு மாங்காய் எண்டு சொல்லு சுப்பு. எல்லா கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2567

Packed By
Royal Industry
Colombo-13

(1789)


# அரச ஊழியர்களை நியமிக்கும் முழுப் பொறுப்பும் நாமலிடமே?



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களை சேர்க்கும் பணிகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே கையாண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச அரசியல்வாதிகள் என பலர் தமது கட்சியினருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குமாறு நாமல் ராஜபக்ஷவிடமே எழுத்து மூலம் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

இதனடிப்படையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் முழு அதிகாரங்களும் நாமல் ராஜபக்ஷவிடம் இருந்துள்ளதுடன், நடைமுறைகளை பின்பற் றாது அரச துறைகளுக்கு ஊழியர்களை இணைத்து கொண்டுள்ளமை உறுதியாகி யுள்ளது.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, பிரதியமைச்சர்நிருபமாராஜபக்ஷ முன்னாள்அமை ச்சர் சீ.பி. ரட்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, பிரதியமைச்சர் சனத் ஜயசூரிய ஆகியோர் தமது ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தருமாறு கோரி அனுப்பிய கடிதங் கள் வெளியாகியுள்ளன.

துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சராக இருந்த ரோஹித அபேகுணவர்தன தனக்கு சொந்தமான அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் தமது ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தருமாறு நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பியு ள்ளமை மிகவும் பாரதூரமான சம்பவமா கும் என சிங்கள இணையத்தளம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த கோரிக்கைகளுக்கு அமைய நாமல் ராஜபக்ஷ இளைஞர்களுக்கான எதிர்காலம் அமைச்சின் கடித தலைப்பை பயன்படுத்தி வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதங்களை வழங்கியுள்ளார்.

நீலப்படையணியின் உறுப்பினர்களுக்கு இலங்கை வங்கியில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதை எதிர்த்து அந்த வங்கியின் தலைவராக இருந்த காமினி விக்கிரமசிங்க பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 18<br>தகைமை/தொழில்: BSC/ கனடா<br>தொ.இ: B/4858 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 21 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4887 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC, MSC, PHD/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4859 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 32 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/4888 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BBA/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/4860 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 42 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Engineering/ ஆசிரியர்<br>தொ.இ: G/4889 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 10<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் அரச தொழில்<br>தொ.இ: B/4861 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 56 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4890 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

12.08.2015
(ஆடி 27, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 7.14 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 11.31 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| கேது | | | சந் |
| | மாலை 5.20 இற்கு கட-சந் | | சூரி செவ் |
| | | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

**மேடம்:** இஷ்ட சித்தியுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், தனவரவில் திருப்தியுண்டு, பயணங்களால் பலனுண்டு, மனோதைரியமுண்டு.

**இடபம்:** மனோ சங்கடங்கள் கூடும், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், ரோக பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரலாம்.

**மிதுனம்:** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாதர் நட்புண்டு, சயன சுகமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவ முற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்:** தனதானிய சேர்க்கையுண்டு, குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, சயன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**கன்னி:** பெரியோரால் மதிக்கப்படுவீர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்:** தொழிலில் சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், அஜீரணம் சம்பந்தப்பட்ட வகையில் கவனமெடுக்க வேண்டிய நாள், பயணங்கால் பலனுண்டு.

**விருச்சிகம்:** உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள், யாருக்கும் பொறுப்புக் கூறுவதை தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** மனோ தைரியம் கூடும், தனவரவுகள் திருப்திதரும் வகையில் அமையும், உயரதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சயன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, பணக் குறைவுகள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்:** ரோக பயமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட 70 சிறுவர்கள் கேமரூனில் மீட்பு

(கேமரூன்)

**கேமரூன் நாட்டில் 70 சிறுவர்கள் நீண்டகாலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கேமரூன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.**

பங்களா ஒன்றில் மேற்படி 70 சிறுவர்களும் வெளியேற முடியாத வாறு தடுத்து வைக்கப்பட்டிருக்கின் றனர்.

இந்தச் சிறுவர்களில் சிலர் சுமார் 3 வருடங்களுக்கு மேலாக சங்கிலி யினால் பிணைக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கேமரூனில் வசிக்கும் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு சிறுவர்களை தந்திரோபாயமாகக் கூட்டிவந்து வீட் டுக்காவலில் வைத்து வந்துள்ளார்.

கேமரூன் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்படி பங்களாவை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போதே மேற்படி 70 சிறார்களும் மீட்கப்பட்டிருக்கின் றனர்.

மேற்படி ஆசிரியர் சிறுவர்களைக் கடத்தி வீட்டுக்காவலில் வைத்திருந் தமைக்கான காரணத்தைக் கண்ட றிய பொலிஸார் தீவிர விசாரணை களை ஆரம்பித்திருக்கின்றனர்.

இதேவேளை மேற்படி 70 சிறார் களும் கடத்தப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தமை அங்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள் ளது. (3)

# கறுப்பின இளைஞன் மீது சூடு அமெரிக்காவில் கலவரம்

## ஊரடங்கு அமுல்; 57 பேர் கைது



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மிஸ் சோரி மாகாணத்தில் உள்ள பெர்குசனில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி கறுப்பர் இன வாலிபர் மைக்கேல் பிரவுன் (18) என்பவர் திருட்டு குற் றச்சாட்டின் பேரில் விசாரிக்க பொலி ஸாரால் அழைத்து செல்லப்பட்டபோது வெள்ளை இன பொலிஸ் அதிகாரிக ளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதை தொடர்ந்து அங்கு பெரும் கலவரம் மூண்டது.

அவர் சுட்டுக் கொல்லப்பட்ட ஓராண்டு நினைவு தினம் பெர்கு சனில் நேற்று முன்தினம் கடைப் பிடிக்கப்பட்டது.

அப்போது நடைபெற்ற அமைதி பேரணியில் பல்லாயிரக்கணக் கானோர் கலந்து கொண்டனர். அதில் திடீரென கல்வீச்சு சம்பவம் நடந்ததால் வன்முறை வெடித்தது. கடைகள் அடித்து நொறுக்கப்பட்ட தால் கலவரமாக மாறியது.

கலவரத்தை அடக்க பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினர். அதில் டைரோன் ஹாரீஸ் என்ற 18 வயது இளைஞர் படுகாயம் அடைந்தார். உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனால் பெர்குசன் நகரில் பதற்ற மான சூழ்நிலை நிலவுகிறது. மீண் டும் கலவரம் மூளும் நிலை உள் ளது. எனவே, அதை கட்டுக்குள் கொண்டுவர பெர்குசனின் புற நக ரான செயின்ட் லூயிஸ் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான உத்தரவை செயின்ட் லூயிஸ் செயல் அதிகாரி ஸ்டீவ் ஸ்டென்ஜர் பிறப்பித்துள்ளார்.

பொலிஸாருக்கும், பொது மக் களுக்கும் இடையே மோதல் ஏற் படாமல் தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கலவரம் தொடர்பாக 57 பேரை பொலிஸார் கைது செய்துள்ள னர். பெர்குசனை தொடர்ந்து நியூ யோர்க் நகரிலும் நேற்று முன்தினம் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந் தன. அதை தொடர்ந்து அங்கும் பலர் கைது செய்யப்பட்டனர். (3-7)

# வெடிகுண்டுமீது முழங்காலிட வைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். குண்டுத் தாக்குதல்



ஆப்கானிஸ்தானில் கைதிகளை வெடிகுண்டு வைத்து வெடிக்க செய் யும் கொடூரக் காட்சிகள் அடங்கிய வீடி யோவை ஐ.எஸ்.தீவிரவாதிகள் வெளி யிட்டுள்ளனர்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக் கம் செலுத்திவரும் ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் உலகநாடுகளின் படைகள் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இருப்பினும் உலகிற்கே பெரும் அச்சுறுத்தலாக உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம் குறைந் ததாக தெரியவில்லை. ஐ.எஸ். தீவிர வாதிகளும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே தங்களிடம் சிக்குப வர்களை கொடூரமான முறையில் கொலை செய்து வீடியோவை வெளி யிட்டு வருகின்றனர்.

இது தொடர்பான வீடியோக்கள் வெளியாகி பலமுறை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சமீபத்தில் பாலி யல் உறவுக்கு மறுத்த 19 பெண் களை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொலை செய்தது தொடர்பான தகவல்கள் வெளியாகி பெரும் அச்சத்தை ஏற் படுத்தியது.

இந்நிலையில் கைதிகளை வெடி குண்டு மீது முழங்காலிட செய்து. வெடிகுண்டை வெடித்து கொலை செய்யும் வீடியோவை ஐ.எஸ். தீவிர வாதிகள் வெளியிட்டுள்ளனர்.

தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக் கம் நிறைந்த ஆப்கானிஸ்தானில் தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகளும் காலூன்றி உள்ளனர். இருதீவிரவாத இயக்கங்கள் இடையேயும் சண்டை நீடித்து வருகிறது.

கைதிகளை வெடிகுண்டை வைத்து வெடிக்க செய்யும் வீடியோ வானது ஆப்கானிஸ்தானில் எடுக்கப் பட்டது என்று செய்தி வெளியாகி உள்ளது.

மலைப் பகுதியில் ஐ.எஸ். தீவிர வாதிகள் குழி தோண்டி, அதற்குள் வெடிகுண்டை புதைத்து வைக்கின்ற னர். பின்னர் கைதிகளை துப்பாக்கி முனையில் அழைத்து வந்து, வெடி குண்டுகள் வைக்கப்பட்டு இருக்கும் இடம் மீது முழங்காலிட செய்கின்ற னர். பின்னர் வெடிகுண்டை அவர் கள் வெடிக்க செய்கின்றனர். இதனை யடுத்து கைதிகள் சின்னாப்பின்ன மாகும் காட்சிகளும் வீடியோவில் பதிவாகியுள்ளன. (3-7)

# ஈராக்கில் குண்டுத்தாக்குதல் 42 பேர் பலி; 70 பேர் காயம்

ஈராக்கின் கிழக்கு தியாலா மாகாணத்தில் நடந்த இரட்டை வெடிகுண்டு தாக்குதலில் 42 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பக்தாத்தில் இருந்து வட கிழக்கே 60 கிலோமீற்றர் தொலை வில் அமைந்துள்ளது பக்குபா என்ற நகரம். அங்கு சந்தைப்பகுதி யில் எப்போதும் ஏராளமான பொது மக்கள் திரண்டிருப்பார்கள்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இங்கு சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்ததில் 35 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

70-க்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தனர். இந்த தாக்கு தல் நடந்த சற்று நேரத்தில் கனான் என்ற கிராமத்தில் நடந்த மற் றொரு வெடிகுண்டு தாக்குதலில் 7 பேர் துடிதுடித்து பலியாகினர். இது தற்கொலைப் படைத் தாக்கு தல் என்று அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு இது வரை எந்த அமைப்பும் பொறுப் பேற்கவில்லை. ஆனால் இது ஐ.எஸ் தீவிரவாதிகளின் வேலையாக இருக்கலாம் என்று கருதப்படு கிறது. (3-7)



சீனாவில் ஆற்றின் நடுவே புதிய நெடுஞ்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மணி நேரமாக இருந்த பயண நேரம் தற்போது 20 நிமிடமாகக் குறைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நிர்க்கதிக்குள் தமிழரைத் தள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த காத்திருப்பு

## விஜயகலா எச்சரிக்கை

**கடந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக் காலத்தில் நாம் எமது உறவு களையும், உடைமைகளை யும் இழந்து நிர்க்கதி நிலை க்கு தள்ளப்பட்டுள்ளோம். மீண்டும் ஆட்சிக்கு வந்து இத்தகைய நிலையை ஏற்படு ததுவதற்கு முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ முயன்று வருகின்றார். இந்த ஆபத்தி லிருந்து நாம் மீள வேண்டு மானால் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தலைமையிலான ஆட்சியினை உருவாக்க வேண டும். அதற்காக நீங்கள் அனைவரும் யானைச் சின்னத் திற்கு வாக்களிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் யாழ். மாவட்ட முதன்மை வேடபாளரும் முன்னாள் மகளிர விவகார பிரதி அமைச்சரு மான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள் ளார்.**



வட்டுக்கோட்டையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி உருவாக்கப்பட்ட எமது புதிய அரசாங்கமானது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காண்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை களை எடுத்திருந்தது. மக்களின் காணிகளை மீள வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் மீண்டும் இனவாதத்தை கக்கி தென்பகுதி சிங்கள மக்களை ஏமாற்றி ஆட்சி பீடம் ஏறுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் முயன்று வருகின்றனர். இதனால் இந்த அணியின் வெற்றியை தவிர்க்க வேண்டுமானால் நீங்கள் அனைவரும் யானைச் சின்னத்திற்கு வாக்களித்து எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றால் மட்டுமே எமது பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியும். அடுத்த வருடம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமானால் எமது அரசாங்கம் உருவாக வேண்டும். இல்லாவிட்டால் எல்லாமே தலைகீழாக மாறிவிடும். அதளபாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருந்த நாட்டை நாம் நல்லதொரு வழிக்கு மாற்றியுள்ளோம். அந்த வழியில் சென்று எமது பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது உறவுகளையும், உடைமைகளையும், கடந்த அரசாங்க காலத்தில் நாம் இழந்து தவிக்கின்றோம். இனியும் இத்தகைய நிலை ஏற்படக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் வியூகம்

# நேர்மையானவர்களை தெரிவு செய்ய வேண்டும்

## ஜெயசங்கரி வேண்டுகோள்



மாற்றத்தை விரும்பும் மக்கள் இந்தமுறை ஏழு நேர்மையானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். கட்சிகள் என்ற வரையறைக்குள் நிற்காது. நல்ல சேவையாளர்களையும் நேர்மையானவர்களையும் தெரிவு செய்வதே எங்கள் மண்ணில் உள்ள மக்களின் அரசியல் விடிவிற்கும் நாளாந்த பிரச்சினைகளிற்குமான தீர்வாக இருக்கும் என யாழ். தேர்தல் மாவட்டத்தில் பட்டம் சின்னத்தில் சுயேட்சைக்குழுவில் போட்டியிடும் வீ.ஆ.ஜெயசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்முறை சுயேட்சை அணிகளும் தரமான, சமூக அக்கறை கொண்டவர்களைக் கொண்டுள்ளது என்பதை கவனிக்க வேண்டும். மக்கள் நலன்களை முன்னிறுத்தி அரசியல், அரசியல்வாதிகள் இன்று இல்லை. மக்களிடம் அந்நியப்பட்ட பிரமுகர்களும் பெரும் வர்த்தக பிரமுகர்களுமே தேசியம் என்ற நோக்கத்தை முன்வைத்து, தம்மை வளர்த்துக்கொண்டுள்ளனர்.

மக்கள் நலனை முதன்மைப்படுத்திய உரிமை- நேர்மை அரசியலை முன்னிறுத்தி சுயேட்சையாக போட்டியிடும் நான் மக்களை வேண்டிக் கொள்வது இதுதான். ஏழு நேர்மையானவர்கள் எங்கிருந்தாலும் எந்த அணியில் இருந்தாலும் அவர்களை வெல்ல வைத்து அவர்கள் மக்கள் நலனை முன்னிறுத்தி இணைந்து செய லாற்றக் கூடிய வகையில் உங்கள் வாக்குகளை பயன்படுத்தி மாற்ற த்தை செய்யுங்கள். புதியவர்கள், புதிய சக்தி, புதிய ஆற்றல் எம்மக்களிற்கு தேவைப்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (இ)

# ராஜதந்திர அணுகுமுறையே தமிழருக்குத் தேவையானது

## சரவணபவன் தெரிவிப்பு



தென்னிலங்கை அரசு ஒருபோதும் தமிழர்களுக்கு தீர்வை வழங்காது. எமக்கு தேவையானது ராஜதந்திர அணுகுமுறையே என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மாலு சந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற த.தே.கூ வின் மாபெரும் தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எந்த அரசு வந்தாலும் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை இழுத்தடித்துக் கொண்டு போவது வாடிக்கை. இழுத்தடிப்பு அவர்களின் தொடர்ச்சியான நடவடிக்கை. இப்போது ரணில் விக்கிரமசிங்க தொடங்கி விட்டார். முல்லைத்தீவில் ஏதோ பேசியிருக்கின்றார்.


உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். என்ன உண்மை என்பதுதான் யாருக்குமே தெரியவில்லை. மகிந்தவின் ஆட்சிக்காலத்திலும் ரமபோச என்பவர் தென்னாபிரிக்காவில் இருந்து உன்மை கண்டறிய வந்தார். ஒவ்வொருவரும் தமது தீர்வை பற்றி பேசும் போது தங்களுடைய கட்சி தங்களுடைய நிலைப்பாட்டை காட்டுவதற்கு சர்வதேச உலகை திருப்திப்படுத்துவதற்காக செய்துகொண்டிருக்கிறார்கள் -பேசிக்கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் சந்தேகிக்க எங்களுடைய அனுபவம் 66 வருடங்களை கொண்டது. இந்த பேரினவாத அரசுகள் எதுவுமே தமிழர்களுக்கு செய்து கொடுக்காது. அது எங்கள் மனதில் ஆழமாக பதிந்துவிட்டது.

நாங்கள் எழுதாத ஒப்பந்தம் மூலம் தென்னிலங்கையை நம்பினோம். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெளியேற்ற வாக்களிக்குமாறு கோரினோம். நீங்கள் முழு நம்பக்கையையும் வைத்து அமோக வாக்களித்தீர்கள். மகிந்த ராஜபக்ஷ வெளியேற்றப்பட்டார். நாங்கள் மைத்திரி வரவேண்டும் என்று வாக்களிக்கவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எந்த முயற்சியை எந்த அரசுகளும் மேற்கொள்ளவில்லை. அப்படி செய்ய முயன்றிருந்தால் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு முன்வைத்திருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் உள்ள எமது காணிகளை விட்டு படையினர் வெளியேற வேண்டும். காணாமல் போனோர் பற்றி உறுதியான நிலைப்பட்டை எடுக்க வேண்டும். அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கலாம். ஜே.வி.பியை விட முடிந்தால், ஏன் இவர்களை விட முடியாது. பாரபட்சம் காட்டும் போது நல்லிணக்கம் எப்படி ஏற்பட முடியும். இதற்கு ராஜதந்திர அணுகுமுறையில் அணுகப்பட வேண்டும். ஏனைய கட்சிகள் ஏதாவதொன்றுக்கு தமிழர் பிரச்சினையை தீர்க்கும் வல்லமை இருக்கிறதா என மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## அங்கஜன் அழைப்பு



எமது மக்களின் அன்றாட மற்றும் நிரந்தர பிரச்சினைகளிற்கு தீர்வு காண ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவின் கரங்களை பலப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதன் மூலம் எமது வளமான எதிர்காலத்தை அடைய முடியுமென ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதான வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவிற்கு வாக்களித்ததன் மூலம அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் எமது மக்களிற்கு பல நன்மைகள் கிடைத்துள்ளன.

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. எமது மாகாணசபை சுயமாக இயங்க புதிய ஆளுநர் மற்றும் புதிய பிரதம செயலாளர் நியமிக்கப்பட்டனர்.


இதன் மூலம் மாகாணசபை சுயமாக இயங்குவதற்கு எமது ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா வழி வகுத்துள்ளார். எமது வடமாகாண முதலமைச்சர் கேட்டதற்கிணங்க முதலமைச்சர் நிதியத்தினை ஆரம்பிக்க சிபார்சு செய்துள்ளார். இந்தவகையிலே சிறுபான்மை மக்களிற்கு பல நன்மைகள் செய்வதற்கு எமது ஜனாதிபதி உறுதியாக உள்ளார். அந்த வகையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த என்னை ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக்கி சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து கட்சியின் செயற்குழு கூட்டத்திலும் ஆராயப்பட வேண்டும் என்பதற்காகவே என்னை நியமித்தார். எவ்வளவு தூரம் ஜனாதிபதி உங்கள் பிரச்சினைகள் குறித்து மிகவும் அக்கறையாக உள்ளார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் இந்த தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலமே ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்த முடியும். அந்த வகையில் உங்களின் பிரதிநிதியாக நான் நின்று உங்களின் பிரச்சினையை ஜனாதிபதிக்கு நேரே சொல்ல ஒரு வாய்ப்பை தாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த இனவெறியை பரப்பி அதிகாரத்தைப் பெற முயற்சி

## ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ இனவெறியை பரப்பி மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முயற்சிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.**

அம்பாறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

சிங்களம், தமிழ், முஸ்லிம், பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் என அனைத்து மதத் தை சேரந்தவர்களும் வாழக்கூடிய வகையிலான சூழலை கொண்ட புதிய நாடு ஒன்றே 60 மாதங்களில் உருவாக்கப்படும்.

மீண்டும மகிந்த ராஜபக்ஷ ஆட்சி இந்நாட்டினுள் இனவெறியை பரப்புவதற்கு முயற்சிக்கின்றது. மத பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

அவற்றில் ஒன்றையும் மேற்கொள்வதற்கு இடமளிக்க மாட்டோம். அப்படி செய்வார்கள் என்றால் அவர்களுக்கு அவசியமான சட்டத்தை கொண்டு வந்து இந்த நாட்டை ஒன்று படுத்துவோம்.

மகிந்த ராஜபக்ஷவின் இனவெறி என்பது குடும்ப ஆட்சி, சர்வாதிகாரம், மோசடிகள் என மாத்திரம் கூற விரும்புகின்றேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சஜின்வாஸ் குணவர்த்தனவின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சஜின் வாஸ் குணவர்த்தனவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்த காலத்தில் அரச வாகனங்களை துஷ்பிரயோகம் செய்ததாக சஜின் வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

பிணை மனு நிராகரிப்பு தொடர்பில் சஜின் வாஸ் குணவர்த்தன செய்த மேன் முறையீடும் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 200 | 250 | 200 |
| தக்காளி | 100 | 80 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 50 | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 140 | 160 | 160 | 120 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 40 |
| புடோல் | 40 | 20 | 60 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 100 | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 20 | 100 | 50 | 30 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 20 | 20 | 40 | 60 | 20 |
| லீக்ஸ் | 40 | 80 | 120 | 160 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 50 | 80 |
| கறிமிளகாய் | 100 | 150 | 120 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 40-60 | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 140 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 80 | — | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 | 30 | 10 |
| தேசிக்காய் | 40 | 50 | 120 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 40 | 30-40 | 50 | 40 |
| இராசவள்ளி | 200 | 140 | — | 200 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 200 | 100 | 140 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

# மதுபானம் வழங்கினால் கடுமையான நடவடிக்கை

தேர்தல் பிரசாரத்திற்காக மதுபானம் வழங்குவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் மதுபானத்தை விநியோகம் செய்து அரசியல் பிரசாரம் செய்யும் வேட்பாளர்களுக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்ககுமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இதற்கு மேலதிகமாக இந்த விடயம் குறித்து விசாரணை நடத்துமாறு கலால் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுளேன். குறித்த மாகாணங்களில் பெரும் எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் தங்களது பிரசார்ப் பணிகளுக்காக மதுபான விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றனர் என குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. இவ்வாறு மதுபானம் விநியோகம் செய்யும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 460

Search for people, places and things | Nagendram Home

மது மதுமிதா


பசிக்கு ஓடுபவனை விட
உயிருக்கு பயந்து ஓடுபவனே
வேகமாக ஓடுவான்...
நீ சாதிக்க வேண்டுமானால்
பின்னால் சிங்கம்
துரத்துவதாக நினைத்து
ஓடு வெற்றி உனதே!!!

பாலன் குமார்




மிது மிதுர்சா

ஒரு நாள் ஒரு கிளிக்கு திருமணம் செய்ய
சுயம்வரம் நடத்தினாங்க....
காக்கா கிளிக்கு தாலி கட்டறப்ப
கல்யாணத்தை நிறுத்துங்கன்னு ஒரு குரல் கேட்டது.
திரும்பி பார்த்தால் பொலிஸ்
பொலிஸ் காக்காவை அரெஸ்ட் பண்ணிட்டாங்க
ஏன்...?
ஏன்?
.
.
.
நினைவு இருக்கா?
ரெண்டாங் கிளாஸ் படிக்கிறப்ப காக்கா பாட்டியோட
வடையை திருடிடுச்சே!!!



அந்த குற்றத்துக்கு இப்ப அரெஸ்ட் பண்ணிட்டாங்க

நீதி : முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

லக்ஸ்மன் லவண்




தரணி தார்மி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் தயாநிதி கஜேந்திரன் (ராசா)

அன்னைமடியில் : 30.08.1985
அம்பிகை அடியில் : 13.07.2015

ஆண்டு மன்மத ஆனிமாதத்
திங்கள் அன்றுகாண்தகு
அபரபக்கத் திரயோதசி திதி தன்னில்
கஜேந்திரன் சென்றனன் விண்ணுலகம்
எமை மீளாத்துயரில் ஆழ்த்தி

எமது அன்புச் செல்வம் கடந்த 13.07.2015 திங்கட்கிழமை கால மாகிய செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறிய அயலவர்களுக்கும் எமக்கு தோளோடு தோள் நின்று உதவிகள் பல புரிந்தவர்கள், தொலைபேசி, தபால், இணையத்தளம், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் ஊடாகவும் மலர் வளையங்கள் வைத்தும் எம் துயரில் பங்குகொண்டு ஆறுதலளித் தோருக்கும் அமரர் வைத்தியசாலையில் நோய்வாய்ப்பட்டு இருந்த போது அன்புடன் பராமரித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் கள், ஊழியர்களுக்கும் அமரரின் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர் களுக்கும் பிடாரி அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும் இளைஞர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் 12.08.2015 புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"இந்திரபிரஸ்தம்"
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

- குடும்பத்தினர்

(C-1788)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புகளைப் போல் விவேகத்துடனும்
புறாக்களைப் போல் கபடமில்லாமலும்
வாழுங்கள் – புனித பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கொன்றிடப் பாவம் தின்றிடத் தீரும்

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற வேளையில், தேர்தலில் போட்டியிடுவோரின் பிரசாரம் மிகத் தீவிரமடைந்துள்ளது.

நாளை மறுதினம் 14ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்கள் யாவும் முடிவுக்கு வருகின்றன.

17ஆம் திகதி தேர்தல் என்ற நிலையில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் மக்களின் முடிவு என்ன ? என்ற கேள்வி எழுகை பெற்றுள்ளது.

எதுவாயினும் மக்கள் தமது வாக்கை யாருக்கு அளிப்பது என்ற விடயத்தில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து முடிவு எடுப்பது அவசியம்.

அதிலும் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை பதினைந்து அரசியல்கட்சிகளும் ஆறு சுயேட்சைக் குழுக்களும் தேர்தலில் களமிறங்கியுள்ளன.

இத்தகைய களமிறக்கம் எதற்கானது என்பதற்கு அப்பால், தமிழினத்தில் ஒரு பலமான அரசியல் தலைமை இல்லாமல்போயுள்ளது என்பது நிரூபணமாகிறது.

தமிழர்களுக்கான அரசியல்தலைமை (கள்) பலமாக இருந்திருந்தால், இவ்வாறானதொரு போட்டி ஏற்பட்டிருக்க மாட்டாது.

ஆக, தமிழ் அரசியல் தலைமை தாம் சார்ந்த கட்சியின் கட்டமைப்பை உறுதியுடன் கட்டிக்காக்கவில்லை என்பது தெரிகிறது. ஏனெனில் தேர்தல் களத்தில் இறங்கிய கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பிரசாரத்தைப் பார்க்கும் போது, தமிழ் அரசியல் தலைமை மீதான குற்றச்சாட்டுக்கள் முதன்மைப்படுவனவாக உள்ளன.

எனவே இத்தகையதொரு அவலமான நிலைமை தமிழ் மக்களுக்கான படிப்பினை என்பது உணரப்படவேண்டும்.

இது ஒருபுறம் இருக்க, எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற கேள்வியை பலர் தமது நண்பர்கள்–உறவினர்களிடம் கேட்கின்றனர் என்பது சத்தியமான உண்மை.

யாருக்கு வாக்களிக்கலாம்? யார் நல்லவர்கள்? நீங்கள் சொல்லுங்கள் என்று தமிழ் மக்கள் கேட்கின்ற அளவில் தமிழ் அரசியல் நாறடிக்கப்பட்டுவிட்டது.

இதைவிட விசித்திரம் அரச உத்தியோகத்தர்கள் பலர் தபால் மூல வாக்களிப்புக்கு முன்னதாக, தங்களின் நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாருக்கு வாக்களிக்கலாம் என்று கேட்டதாகவும் தகவல்.

முன்னைய காலத்தில் இந்தக் குடும்பம் அந்தக் கட்சி; அந்தக் குடும்பம் இந்தக் கட்சி என்று முத்திரை குத்தப்பட்டிருக்கும். சில பிரதேசங்களில் ஊர் முழுவதுமே ஒரு கட்சிக்கானதாக இருக்கும். சில ஊர்களில் ஒழுங்கைகள், குறிச்சிகள் வேறுபட்ட கட்சி ஆதரவைக் காட்டி நிற்கும். இப்படியாக இருந்த தமிழ் மண்ணில் யாருக்கு வாக்களிக்கலாம்? யார் நல்லவர்? என்று மக்கள் கேட்கின்றனர் எனில் எங்களின் அரசியல் பாரம்பரியம், எங்கள் அரசியல்வாதிகளின் நேர்மைத் தன்மை, அவர்களின் சேவை, மக்களுடனான ஈடுபாடு எவ்வாறு உள்ளது என்பது தெரிகிறதல்லவா?

எது எப்படியோ எங்கள் தலைவிதி இதுதான். வாக்களிப்பது என்பதில் தமிழ் மக்கள் அசமந்தம் காட்டினால் அல்லது ஏனோ தானோ என்ற மன நிலையில் இருந்தால் அதன் பயனையும் உரியவர்களே அனுபவிக்க வேண்டும்.

கொன்றிடப் பாவம் தின்றிடத் தீரும் என்றொரு பழமொழி தமிழில் உண்டு. இதன் பொருள் நாம் மற்றவர்களுக்குச் செய்து கொள்கின்ற பாவத்தை நாம் தின்று (அனுபவித்து) தான் தீர்க்க வேண்டும் என்பதாகும்.

இந்தப் பழமொழியின் உட்பொருள் உணர்ந்து வாக்களியுங்கள்.

## புலிகளுக்கு பணம் வழங்கிய விவகாரம் சம்பிக்கவை விவாதத்துக்கு அழைக்கிறார் கம்மன்பில

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பணம் வழங்கியமை தொடர்பில் தன்னுடன் விவாதத்துக்கு வருமாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு சவால் விடுப்பதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு 2006 ஆம்ஆண்டு 8000 லட்சம்ரூபாயை வழங்கியமை குறித்து தன்னுடன் விவாதத்துக்கு வருமாறு சம்பிக்க ரணவக்க, மகிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்திருந்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கம்மன்பில, இந்த விடயம் குறித்து ரணில் விக்கிரமசிங்கவின் சகாக்களுடன் விவாதிக்க மகிந்த ராஜபக்ஷ வர மாட்டார் எனக் கூறியுள்ளார்.

அதேவேளை வசீம் தாஜுடீனின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட கம்மன்பில,

நான் இது பற்றி யோஷித ராஜபக்ஷவிடம் விசாரித்தேன். தாஜுடீன் அண்ணன் போன்றவர் என்ற முறையில் அவர் மீது மரியாதை இருந்தது எனவும் அவரை சந்தித்ததில்லை எனவும் அவர் தான் படித்த பாடசாலையில் படித்தவர் எனவும் அதனை தவிர வேறு எந்த தொடர்பும் அவருடன் இருக்கவில்லை என யோஷித கூறினார்.

அத்துடன் தாஜுடீனின் சடலம் தோண்டப்படுவது பற்றி பேஷ்புக்கில் பதிவிட்டிருந்த அவரது உறவினர், இதனை அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டிருந்தார்.

மேலும் தாஜுடீன் பயணம் செய்த கார் எரிந்த நேரமும், அவர் வீடுகளுக்கு அழைத்துச் சென்று விட்ட நண்பர்கள் வழங்கிய சாட்சிகள் மூலமும் தாஜுடீன் தாக்கப்படும் அளவுக்கு நேரம் இருக்கவில்லை எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## மகிந்தவின் குற்றச்சாட்டுக்களை மறுக்கிறது பொது பல சேனா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுமத்திய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தேஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தன்னை பதவி கவிழ்க்க பொது பல சேனா இயக்கம் துணை நின்றதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த குற்றஞ்சாட்டியிருந்தார்.

மேலும் தன்னை அதிகாரத்திலிருந்து நீக்குவதற்கு சர்வதேச சக்திகளினால் உருவாக்கப்பட்ட அமைப்பே பொது பல சேனா எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நோர்வே நிதியுதவியுடன் பொது பல சேனா அமைப்பு இயங்கி வருவதாகவும் இது தொடர்பிலான விபரங்கள் அடங்கிய நூல் ஒன்று சந்தையில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாக பொது பல சேனா இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தமக்கு மகிந்த தெரிவித்த பாராட்டாகவே இதனை கருதுவதாகவும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும், தாம் கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவுக்கு ஆதரவாக செயற்பட்டதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெளிநாட்டு உதவிகள் எதனையும் பொது பல சேனா பெறவில்லை என்பதனை நிரூபிக்க பல சந்தர்ப்பங்களில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த ஆதாரங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்த மகிந்த, சிலரின் தவறான வழிநடத்தல்களினால் பிழையான பாதையில் செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வருடங்கள் ஆட்சியில் நீடிக்க சந்தர்ப்பம் இருந்தபோது, நாம் செய்த சூழ்ச்சியின் காரணமாகவா மகிந்த முன்கூட்டியே தேர்தல் நடத்தி தோல்வியைத்தழுவினாரா? என ஞானசர தேரர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (செ-12)

## தேர்தல் பணியாளர்களின் விபரங்களை சமர்ப்பிக்க

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் கடமைகளில் ஈடுபட இருப்பவர்கள், தமது விபரங்களை இன்று 12ஆம் திகதி மதிய நேரத்துக்கு முன் சமர்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கேட்டுக்கொண்டுள்ளார்.

இவர்கள் தேர்தல் விதிமுறைகளின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரின் கீழ் ஒழுங்குமுறையின் அடிப்படையில் செயற்படாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதுவரையில், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உள்ளடங்கலாக தேர்தல் பணிகளில் ஈடுபட இருப்பவர்களில், தமது விபரங்களை சமர்பித்தவர்களின் அளவு மிககுறைவானதாகவே உள்ளது என தெரிவித்துள்ளார்.

ஜுன் 29 வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பிஇ/ 2015/01/ எஸ்டியின்படி, அரச ஊழியர்களின் தமது விபரங்களை தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் இதன்போது தெளிவுப்படுத்தினார். (செ-11)

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட

## வெலே சுதாவுக்கு எதிராக தொடர்ச்சியான விசாரணை

(கொழும்பு)

பாரிய போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள கம்பள விதானகே சமந்த குமார எனப்படும் வெலே சுதாவின் மற்றுமொரு வழக்கை தொடர்ச்சியாக விசாரணை செய்ய நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஏழு கிராம்எடையுடைய ஹெரோயின் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்ததாக வெலே சுதா மீது இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இன்று முதல் தொடர்ச்சியாக இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் பீரிதி பத்மன் சூரசேன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வெலே சுதாவிற்கு எதிராக மற்றுமொரு ஹெரோயின் போதைப்பொருள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தானிலிருந்து பாரியளவில் போதைப் பொருள் கடத்தியதாக வெலே சுதா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## குற்றப் புலனாய்வு பிரிவுக்கு தனசிறியை ஆஜராகுமாறு அழைப்பு

(கொழும்பு)

தெஹிவளை-கல்கிசை மாநகர மேயர் தனசிறி அமரதுங்கவை இன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பேர் உயிரிழக்க காரணமாக கொட்டாஞ்சேனை புளுமெண்டல் பிரதேசத்தில் அண்மையில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தவே அவர் அழைக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் பயணம் செய்த வாகனம் எனக் கூறப்படும் வாகனத்தை பொலிஸார் கைப்பற்றி வைத்துள்ளனர். இந்த வாகனம் தன சிறி அமரதுங்கவுக்கு சொந்தமானது எனக் கூறப்படுகிறது.

அத்துடன் அமரதுங்கவின் அலுவலகத்துக்கு அருகில் காணப்பட்ட நிலையில் வாகனம் கைப்பற்றப்பட்டது.

எனினும் தனக்கு இந்த வாகனம் பற்றி எதுவும் தெரியாது என தனசிறி அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

தனசிறி அமரதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் இம்முறை பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முதலில் கடவுளைத் தேடு



✦ முதலில் கடவுளைத் தேடு. அதன்பின், உலகப் பொருட்களை தேடி செல்லலாம்.

✦ எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார். ஆனால், கடவுளிடத்தில் எல்லா மனிதர்களும் இருப்பதில்லை.

✦ மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதை பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.

✦ கடவுளின் திருநாமத்தை இடைவிடாது ஜெபித்தால் உடல், மனம் எல்லாம் தூய்மை பெறும்.

✦ நம்பிக்கை ஆழமானால் கடலையும் தாண்டலாம்.

✦ ராம நாமத்தின் மீது கொண்ட நம்பிக்கையால் அனுமன் இதை சாதித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மாவட்டத்தின்

# கிராமமட்ட அமைப்புக்களுடன் அபிவிருத்தி தொடர்பான சந்திப்பு

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தின் அனைத்து கிராம மட்ட அமைப்புக்களுடன் கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இதற்கமைய மன்னார் மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவிற்கும் உட்பட்ட அனைத்து கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினது தலைவர் ,செயலாளர்கள ஆகியோரை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மன்னாரில் உள்ள அவரது உப அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இதன் போது அவர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்கள் எவ்வாறு பயன்படுத் தப்படுகின்றது. சங்கங்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் இயங்குகின்றனவா? போன்ற விடயங்கள் தொடர்பிலும், அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தி திட்ட ங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் குறித்தும் விசேட ஒன்றுகூடலுக்கு அமைச் சரின் பணிப்புக்கமைவாக மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மன்னார் மாவட்டத்தின் சகல மாதர்/கிராம அபிவிருத்தி சங்கங்களும் தவறாது இவ் விசேட சந்திப்பில் கலந்து அடுத்த ஆண்டுக்கான தங்களது அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த முனையுமாறு அவர் கேட்டுள்ளார். (2-9)

# மடுத்திருப்பதியில் அரச மத விழா ஒருங்கிணைப்பு அலுவலகம் திறப்பு




(மன்னார்)

மன்னார் மடு திருத்தலத்தில் அமைக்கப்பட்ட அரச மத விழா ஒருங்கிணைப்பு அலுவலகம், நேற்று முன்தினம் வைபவரீதியாக திறந்துவைக்கப பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம். வை.எஸ்.தேசப்பிரிய, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ்பிள்ளை, கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஆர். குணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டு குறித்த அலுவலகத்தினை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

மடுத் திருத்தலத்தில் ஜுன் மாதம 2ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும் இடம்பெறும் மடு அன்னையின் திருவிழா அரச திருவிழாவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் குறித்த இரு திருவிழா தொடர்பாக முனனாயத்தங்களை மேற்கொள்ளும் ஓர் அலுவலகமாகவே குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது மடு பிரதேச செயலாளர் சத்தியசோதி, மன்னார் மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்ஸி டி மேல், பொலிஸ் அதிகாரிகள், திணைக்களத்தின் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி இடம் பெறவுள்ள மடு அன்னையின் ஆவணித்திருவிழா தொடர்பான முன்னாயத்தங்கள் தொடர்பில் ஆராயும் அவசரக்கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இதன்போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2)




# துவிச்சக்கர வண்டிகள் பொலிஸாரால் பறிமுதல்



(கிளிநொச்சி-1)

டைனமோ இணைக்கப்படாமல் வெளிச்சமின்றி பயணத்தை மேற்கொண்ட துவிச்சக்கரவண்டிகள் கிளிநொச்சி பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்ட சம்பவம் கிளிநொச்சி நகரில் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் வீதியால் வெளிச்சமின்றி பயணத்தை மேற்கொண்டவர்களின் துவிச்சக்கரவண்டிகளே பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டன.

இதனால் அதிகாலை வேலைக்குச் சென்று வீடு திரும்பியவர்கள், தமது பிள்ளைகளைதனியார் வகுப்புகளுக்கு கொண்டு சென்று வீடு திரும்பியவர்கள், தேவையின் நிமிர்த்தம் வெளியிடங்களில் இருந்து நகரப் பகுதிக்கு வந்தவர்கள ஆகியோரின் துவிச்சக்கரவண்டிகளே பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது சிக்கின.

துவிச்சக்கரவண்டிகளைப் பறிகொடுத்த பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதோடு பொலிஸாருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

எனினும் பொலிஸார் துவிச்சக்கரவண்டிகளில் இரவுநேரத்தில் வெளிச்சமின்றி பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு பயணிக்கும்போது விபத்துக்கள் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும் நிலைமைகளும் ஏற்பட்டுள்ளதாக அவர்களுக்கு எடுத்துக் கூறினர்.

அத்துடன் டைனமோ தொகுதியுடன் பொலிஸ் நிலையம் வந்து துவிச்சக்கரவண்டியில் பொருத்தி எடுத்துச் செல்லுமாறும் கூறினர்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுத்தனர். (2-277)

# வளப்பற்றாக்குறையுடன் இயங்கும் கிளிநொச்சி பொழுதுபோக்கு பூங்கா

(கண்டாவளை)

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாகவுள்ள சிறுவர் பொழுது போக்கு பூங்கா பல்வேறுபட்ட வளப்பற்றாக்குறையுடன் காணப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான பகுதியில் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளதால், கிராமப் புறங்களிலிருந்து தேவைகளின் நிமிர்த்தம் கிளிநொச்சிக்கு வருபவர்களும் நகரை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்களும் தமது குழந்தைகளை இப்பூங்காவில் விளையாடுவதற்காக தம்முடன் அழைத்து வருகின்றார்கள்.

குறிப்பாக விடுமுறை நாட்களில் பெருமளவு சிறுவர் பூங்காவில் பொழுதைக்கழிக்கின்ற போதும் இவ்வளாகத்தில் மலசலகூடம் அமைக்கப்படாமையாலும் அங்கு வைக்கப்பட்டுள்ள குடிநீர் தாங்கி துப்புரவு செய்யப்படாமையாலும் வருகை தருபவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அங்கு சிறுவர்களைக் கவர்வதற்காக அமைக்கப்பட்டுள்ள காட்சி உருவங்கள் சில சேதமடைந்து அதன் மீது ஏறி விளையாடுகின்ற சிறுவர்களை காயப்படுத்துகின்ற வகையில் காணப்படுகின்றது.

அங்கு நாட்டப்பட்டுள்ள பூஞ் செடிகளுக்கு நீர் விடாமையால் அம்மரங்கள் வறண்டு காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே பூங்காவில் மனமகிழ்வுடன் சிறுவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற விதமாக அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-263)



கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழ் அடம்பன் சோலைப்பகுதியில் இயந்திரம் மூலம் நடுகை செய்யப்பட்ட நெல்வயலின் வயல்விழா நேற்று காலை 9 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா, பிரதி விவசாய ஆராய்ச்சி பணிப்பாளர் கலாநிதி அரசகேசரி, விவசாய விதைகள் உற்பத்திப் பணிப்பாளர் வ.சதீஸ்வரன், கமநலசேவை உதவிப்பணிப்பாளர், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள், [illegible] நிறுவனத்தினர் என பலதரப்பினரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்: - சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை
## ஆண்/பெண்

- கணக்கு பதிவாளர்
- கணனி தரவு பதியுனர்
- விற்பனையாளர்

தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-0778473222**

(1468)


## மரண அறிவித்தல்

### தயாளினிதேவி பார்த்தீபன்



யாழ்.சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Epinay sous-Senartஐ வசிப்பிடமாகவும் கொண்ட தயாளினிதேவி பார்த்தீபன் அவர்கள் 07.08.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சற்குணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நகுலேசன் சறோசா (கோண்டாவில்) தம்பதிகளின் அன்பு மருமகளும், பார்த்தீபன் அவர்களின் அன்பு மனைவியும், அஜந்தன், ஜனார்த்தன், யசிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சறோஜினிதேவி, விநாயகமூர்த்தி, சுலோஜினிதேவி, விமலறஞ்சினிதேவி, கனகநாயகம், ரவிந்திரன், ராஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விநாயகமூர்த்தி, கணேசமூர்த்தி, பிரதீபன் (பிரான்ஸ்), பிரகாசன் (கனடா), பிரதர்சினி (லண்டன்), மாலதி, புலேந்தினி (பிரான்ஸ்), நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2015) புதன் கிழமை நடைபெற்று பூதவுடல் வெலின்டன் பிரான்ஸில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:-
0779391883,
021 2059060

தகவல்:-கனகநாயகம்
(சந்திரன் றஞ்சனாஸ் சுன்னாகம்)
அண்ணி, மருமக்கள்

(1472)

## தாஜுடீனின் சடலம்...

குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவோர் அச்சம் காரணமாக குற்றங்களை மூடிமறைப்பது மிகப்பெரிய தவறு எனவும் ஆபத்தான செயற்பாடு எனவும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழுவின் கொள்கை மற்றும் நிகழ்ச்சி பணிப்பாளர் பெசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய குற்றச் செயல்கள் தொடர்பிலான பல விசாரணைகள் கிடப்பில் போடப்பட்ட நிலைமையே இலங்கையில் நீடித்து வந்தது.

கொலைகள், கொள்ளைகள், பலவந்தமான காணாமல் போதல்கள், கடத்தல்கள் போன்ற சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படுவதில்லை. குறிப்பாக இந்த சம்பவங்களுடன் அரசியல்வாதிகள் அல்லது அவர்களின் உறவினர்கள் தொடர்புபட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டால் விசாரணைகள் மூடி மறைக்கப்படும் சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன.

லசந்த விக்ரமதுங்க, நடராஜா ரவிராஜ், பிரகீத் எக்நெலிகொட உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களை இது தொடர்பில் பட்டியலிட முடியும்.

குற்றச் செயல் விசாரணைகள் பிரிவினைவாதமாகவோ, அரசியல் கட்சிகளின் தேவையாகவோ நோக்கப்படாது நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கருதப்பட வேண்டும்.

வசீம் தாஜுடீன் மரணம் தொடர்பிலான விசாரணைகள் சரியான திசையில் நகர்வதாக உணர்கிறேன். இந்த முனைப்பு உரிய முறையில் தொடர்ச்சியாக முன் நகர்த்தப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## பிரகீத் கடத்தல்...

இராணுவத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் மேஜர் தர அதிகாரியும், விடுதலைப் புலிகள் இயக் கத்தில் இருந்து பிரிந்து சென்ற ஒருவரும் இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசியபோது ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட போது, புலனாய்வு அதிகாரியாக செயற்பட்ட சார்ஜன்ட் மேஜரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், தாம் எக்னெலிகொடவிடம், "குடும்ப விருட்சம்" என்ற நூல் தொடர்பாகவும், சரத் பொன்சேகாவுடனான தொடர்புகள் குறித்தும் விசாரித்ததையும், அவர் ஒப்புக்கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை குருநாகலில் வைத்து கைது செய்யப்பட்ட இந்த சார்ஜன்ட் மேஜர், தாம் பிரகீத் எக்னெலிகொடவை கிரிதல இராணுவ முகாமில் வைத்து விசாரணை செய்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரி இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றி வந்துள்ளார்.

தான் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், கிரிதல இராணுவ முகாமில் உள்ள மேஜர் தர அதிகாரி ஒருவர், பிரகீத் எக்னெலி கொடவை அழைத்துச் சென்றதாகவும் அந்த சார்ஜன்ட் மேஜர் தகவல் வெளியிட்டுள்ளார். (செ-11)


## வாடகைக்கு

கொழும்புத்துறை வீதி சுண்டிக்குளியில் சுற்றுலாப் பயணிகள், விற்பனைப் பிரதிநிதிகளுக்கு **A/C, Non A/C** மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (1444)

தொடர்புகளுக்கு
**0768079284 , 0774803961**

## தேவை

உள்ளூர் உணவு உற்பத்தி நிலையம் ஒன்றுக்கு புத்தூர் சிறுபிட்டி பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருப்பது விரும்பத்தக்கது.

(1464)

தொடர்புகளுக்கு
**077-654 9303**


## யாழ்ப்பாணம் மாநகர சபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2015**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் 12.08.2015-18.08.2015ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 2.00 மணிவரை படிவங்கள் விநியோகிக்கப்படும். 18.08.2015 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் படிவங்கள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை மாநகர சபை, நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம். கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**திரு.செ.பிரணவநாதன்**
**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**11.08.2015**

(1791)


## பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2015

### இலங்கைத் தமிழரசுக் கட்சி
### (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)
### மாபெரும் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டம்

**காலம்:-13.08.2015 வியாழக்கிழமை பி.ப 5.30 மணி**
**இடம்:-முத்திரைச் சந்தி, (சங்கிலியன் பூங்கா, நல்லூர்)**
**தலைவர்:-கௌரவ சீ.வீ.கே.சிவஞானம் அவர்கள்**
(வட மாகாண சபை, அவைத் தலைவர்)

**உரையாற்றுவோர்**

01.திரு.மாவை சோ.சேனாதிராசா (முன்னாள் பா.உ) வேட்பாளர் (தலைவர் இ.த.அ.கட்சி)
02.திரு. க.பிரேமச்சந்திரன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் (தலைவர் ஈ.ம.பு.வி முன்னணி கட்சி)
03.திரு.த.சித்தார்த்தன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் தலைவர் புளொட்
04.திரு.ந.ஸ்ரீகாந்தா முன்னாள் பா.உ) வேட்பாளர் பிரபல சட்டத்தரணி
05.திரு.ம.அ.சுமந்திரன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் பிரபல சட்டத்தரணி
06.திரு.ஈ.சரவணபவன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் நிறுவுனர் உதயன் குழுமம்
07.திரு.சி.சிறிதரன் (முன்னாள் பா.உ) வேட்பாளர் முன்னாள் அதிபர், கிளிநொச்சி
08.திரு.க.அருந்தவபாலன் வேட்பாளர் அதிபர் டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி
09.திருமதி மதினி நெல்சன், வேட்பாளர் முன்னாள் உறுப்பினர் பருத்தித்துறை நகர சபை
10.திரு.ந.அனந்தராஜ் வேட்பாளர் ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் முன்னாள் தவிசாளர் வல்வெட்டித்துறை நகர சபை

தமிழ் தேசிய அபிமானிகள் அனைவரையும் கருத்துக்கேட்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு**

(சி-484)

## நாடாளுமன்ற பொதுத் தேர்தல்- 2015
## வன்னி மாவட்டம்



வன்னியின் இளைய தலைமுறையின், இன்றைய தலைவன். வன்னியின் முத்து. கொத்துக் கொத்தாய் வேலைவாய்ப்பை அள்ளி வழங்கிய எங்கள் தலைவனின் தளபதி. தனக்கென வாழாத தமிழ்த் தாய் புதல்வன். என்றும் பணிக்கொடை மன்னன் **கமலநாதன் விஜிந்தன்** அவர்களை அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்வோம்.

(485)



றிசாத் பதியுதீன்

1 2



கமலநாதன் விஜிந்தன்

இளைஞர் கழகங்கள்
வன்னி மாவட்டம்


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி றீற்றம்மா தர்மசகாயம்பிள்ளை



எமது கல்லூரி ஆசிரியை திருமதி புனிதசீலி அன்ரன் ஜோ அமல்ராஜ் அவர்களின் அன்புத் தாயார் திருமதி றீற்றம்மா தர்மசகாயம்பிள்ளை (3-ம் வட்டாரம், மண்டைதீவு) அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன், குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

(1470)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org